₹100/-

2 - 10

# ஞானகுரு மகிழ்ச்சி

எஸ்.கே.முருகன்

அக்டோபர் 2023

## ஆவியுடன் பேச ஆசையா..?



திருமண உறவு
சிக்கல்கள் தீர்வு மையம்



திருமணத்திற்கு முன்...
திருமணத்திற்கு பின்...
சிறப்பு ஆலோசனைகள்

தொடர்புக்கு
GG Relationship Counseling
Madurai, Viruthunagar +91 80725 89355

www.gyanaguru.com



ஆசிரியர் பக்கம்

# நாலு பேருக்கு நல்லது செஞ்சா..?

தர்மம் தலை காக்கும், தர்மம் புண்ணியக் கணக்கில் சேரும் என்றெல்லாம் நம்புவதன் காரணமாகவே, நிறைய பேர் பிச்சை போடுபவர்களாக இருக்கிறார்கள். கோயில் காரியம் என்று கேட்பவர்களுக்கு யோசிக்காமல் டொனேஷன் கொடுக்கிறார்கள்.

தர்மத்துக்கு உதாரணமாக கர்ணனை காட்டுகிறார்கள். நிறைய தர்மம் செய்து புண்ணியம் சேர்த்துவிட்டதால், கர்ணனை யுத்த களத்தில் அர்ஜூனனால் கொல்ல முடியவில்லை.  அதனாலே அவனுடைய தர்மத்தின் பலன்களை எல்லாம் கிருஷ்ணன் தானமாக பெற்றார். அதன் பிறகே கர்ணன் மரணத்தை தழுவினான் என்று தர்மத்தின் பெருமையைச் சொல்லி சிலாகிப்பார்கள்.

இது உண்மையா..? தர்மம் தலை காக்குமா? ஊரான் பிள்ளையை ஊட்டி வளர்த்தால், தன் பிள்ளை தானே வளருமா? நாலு பேருக்கு நல்லது செஞ்சா, நமக்கும் நல்லதே நடக்குமா..? முற்பகல் செய்யின் பிற்பகல் விளையுமா?

வாய்ப்பே இல்லை, இவை எல்லாமே அக் மார்க் மூடநம்பிக்கைகள்.

இயற்கை என்பது மனிதரின் கணக்குப்பிள்ளை அல்ல. ஒருவரது செயல்களுக்கு ஏற்ப பரிசு அல்லது தண்டனை வழங்கும் நீதிபதியும் அல்ல. இயற்கை மனிதனின் கணக்குகளுக்கு அப்பாற்பட்டது. ஆகவே, பிறரை மகிழ்விக்கும் விருப்பம் இருந்தால் மட்டும் தர்மம் செய்யுங்கள். பிரதிபலன் பாராது தர்மம் செய்யுங்கள்.

அப்படியென்றால் தர்மம் செய்வதால் என்ன பலனும் கிடையாதா..?

இருக்கிறது. தர்மம் செய்யும்போது பிறர் மகிழ்ச்சியைக் காணும் வாய்ப்பு கிடைக்கிறது. அந்த மகிழ்ச்சி எல்லையில்லா ஆனந்தம் தரக்கூடியது. இந்த மகிழ்ச்சிக்காக மட்டும் தர்மம் செய்யுங்கள். இம்மை, மறுமை, புண்ணியம் என்றெல்லாம் நம்பினால், ஏமாந்து போவீர்கள்.

பொதுவாக தேவையில்லாத அல்லது தங்களிடம் அதிகம் இருப்பதையே மக்கள் தர்மம் செய்கிறார்கள். அதுவே, இன்னொருவருக்கு அத்தியாவசியமாக இருப்பதால் அவர் பேரானந்தம் அடைகிறார். பிறருக்கு ஆனந்தம் தரக்கூடிய அத்தனை பேரும் கடவுளுக்கு இணையானவர்களே, இந்த சந்தோஷ அனுபவத்திற்காக தர்மம் செய்யுங்கள்.

இதுவே மகிழ்ச்சி.

– ஆசிரியர்

www.gyanaguru.com



# கணவனை பிடிக்கும் ‘அது’ பிடிக்காது

இந்தியாவில் நிறைய பெண்கள், குறிப்பாக குழந்தைக்கு அம்மா ஆகிவிட்ட பெண்களின் படுக்கையறை ஸ்டேட்மென்ட் என்ன தெரியுமா..?

‘எனக்கு என் வீட்டுக்காரரை ரொம்பப் பிடிக்கும்... ஆனா, இந்த செக்ஸ் பிடிக்கவே பிடிக்காது. அதை அவர்கிட்டேயே சொல்லிட்டேன். நீ என்ன வேணும்னாலும் செஞ்சுக்கோ, வேற பொண்ணைக்கூட வைச்சுக்கோ... என்னை விட்ரு’ என்று சொல்லிவிட்டு சிரிப்பார்கள்.

ஒரு பெண் இப்படி சொல்வதற்கு ஒரே ஒரு காரணமே இருக்க முடியும். அது, அவள் செக்ஸில் ஏமாந்து போயிருக்கிறாள் என்பதுதான். ஏனென்றால் அது பசி போன்ற இயற்கையான உணர்வு. அதனை எந்த பெண்ணாலும், ஆணாலும் வெறுக்கவே முடியாது. கடுமையான ஏமாற்றமும் அதிருப்தியும், குழப்பமும் அடைந்தவர்களால் மட்டுமே அதனை தள்ளிவைக்க முடியும்.

படுக்கையில் பெண்ணின் உணர்வுகள் சிம்பிளாகத் தொடங்கி, நிதானமாக உச்சத்தைத் தொட்டு, அதே இடத்தில் எத்தனை மணி நேரமானாலும் தாக்குப்பிடிக்கும் தன்மை கொண்டது. ஆணின் உணர்வுகள் விறுவிறுவென உச்சம் தொட்டு, அடுத்த நொடியே அதலபாதாளத்தில் விழுந்துவிடும். ஆகவே, படுக்கையறையில் முதலில் பெண் உடலுக்கு மதிப்பு கொடுத்து அவளை திருப்தியடையச் செய்வதே ஆணின் கடமை. அதுதான் தாம்பத்தியத்தின் அடிப்படையும் ஆகும்.

ஆனால், பெண்ணின் உணர்வுகளை பெரும்பான்மையான ஆண்கள் கண்டுகொள்வதே இல்லை. அவர்களுக்கு செக்ஸ் என்பது ஒரு நல்ல தூக்க மாத்திரை. ஆகவே, இயக்கத்திற்கு பிறகு



www.gyanaguru.com



சந்தோஷமாக தூங்கிப் போகிறார்கள். அதேநேரத்தில், உணர்வுகள் தூண்டப்பட்டு உச்சம் தொடுவதற்குக் காத்திருக்கும் பெண் பெருத்த ஏமாற்றத்துக்கு ஆளாகிறாள். ஆனால், ஆண்களுக்கு பெண்ணின் உச்சகட்டம் பற்றிய புரிதல் கிடையாது என்பதால் பெண்ணின் விருப்பத்தை கண்டுகொள்ளாமல் தள்ளிப்படுத்து தூங்கிப் போகிறார்கள்.

இந்த விஷயத்தில், தன்னுடைய ஆசையை வெளிப்படையாகச் சொல்வதற்கும், உரிமையுடன் கேட்டுப் பெறுவதற்கும் பெண் கூச்சப்படுகிறாள். ஏனென்றால், அச்சமும், மடமும், நாணமும் பெண்ணின் குணங்களாக நம் நாட்டில் வடிவமைக்கப்பட்டுள்ளன. எனவே அந்த வட்டத்தை தாண்டி பெண் வெளியே வருவதில்லை. அதேநேரம், மனைவியை கணவன் படுக்கையறையில் திருப்திபடுத்தி விட்டானா என்ற கேள்வியை யாரும் எழுப்புவதே இல்லை. ஏனென்றால் ஒரு பெண் குழந்தை பெற்று விட்டாலே அவளுடைய கணவன் ஆண்மை மிகுந்தவனாக பாராட்டு பெற்று விடுகிறான். இதையே பெண்ணும் தன்னுடைய வெற்றியாக எடுத்துக்கொள்கிறாள்.

அதன்பிறகு, தனக்கு தொடர்ந்து ஏமாற்றம் தரும் செக்ஸ் விளையாட்டில் பங்கேற்காமல் ஒதுங்குவதே நல்லது என நினைக்கிறாள். ஆகவே, செக்ஸில் விருப்பமில்லை என்று வெளிப்படையாக அறிவிக்கிறாள். இதன் மூலம் தன் உடம்பை புரிந்துகொள்ளாத கணவனை தன்னிடமிருந்து முழுமையாகத் தள்ளிவைக் கிறாள். ஆனால், இந்த உண்மையையும் பெண் கள் வெளிப்படையாக ஒப்புக்கொள் வதில்லை என்பதுதான் அவர்களுடைய பரிதாபம்.

’அப்படியெல்லாம் இல்லை... எனக்கு என் கணவனை நிஜமாகவே பிடிக்கும். ஆனால், செக்ஸ் மட்டுமே பிடிக்காது’ என்று கூறிய பெண்ணுக்கு ஓஷோவின் பதில் என்ன தெரியுமா..?


’’நீங்கள் ஒரே நேரத்தில் கணவனை விரும்புவதாகச் சொல்வதும், செக்ஸை வெறுப்பதாகச் சொல்வதும் சாத்தியமேயில்லை. வார்த்தைகளில் விளையாடுகிறீர்கள். செக்ஸை வெறுக்கிறீர்கள் என்றால் அதனை ஏதோ தப்பான விஷயமாக நினைத்துக்கொண்டு இருக்கிறீர்கள்.

கணவர் உங்களுடைய அனைத்து தேவை களையும் பூர்த்தி செய்ய வேண்டும். வீட்டுச் செலவுகளுக்கு செல்வம் கொண்டுவர வேண்டும். வீட்டை பாதுகாக்க வேண்டும். அவரையும் குழந்தையையும் பராமரிக்கும் உங்களுக்கு கார், பட்டுப்புடவை வாங்கித்தர வேண்டும் என்று ஆசைப்படுகிறீர்கள். உங்கள் தேவைகளை நிறைவேற்றுவதற்கு கணவன் பயன்படுவதை அன்பு, காதல் என்று தவறாக நினைத்துக்கொண்டு இருக்கிறீர்கள்.

ஆனால், உங்களுடையது எதையும் கணவரிடம் பகிர்ந்துகொள்ள நினைக்கவில்லை. உங்களுக்கு உண்மையிலேயே உங்கள் கணவர் மேல் அன்பு இருந்தால் உங்களுடையது அனைத்தையும், உங்கள் உடல் உட்பட அவருக்குப் பகிர்ந்தளிப்பீர்கள்.

காதலர்கள் இடையே கணவன் - மனைவி இடையே ரகசியங்களே இருக்க முடியாது. நீங்கள் காதலிக்கும்போது உங்கள் இதயம் எப்போதும் திறந்தேயிருக்கும். நீங்கள் உங்கள் கணவனைக் காதலித்தால் அவருடன் நரகத்திற்குச் செல்லக்கூட தயாராக இருப்பீர்கள். அதேநேரம், கணவனை காதலிக்கவில்லை என்றால், பிடிக்கவில்லை என்றால் அதனை வெளிப்படையாக ஒப்புக்கொள்ள மனைவிக்கு மனம் வருவதில்லை.

ஆகவே, என் கணவனைப் பிடிக்கும்... செக்ஸ்தான் பிடிக்காது என்று வார்த்தைகளில் விளையாடுகிறார்கள். அதாவது கணவனின் பணம் வேண்டும், கணவனின் பாதுகாப்பு வேண்டும், ஆனால், அவன் வேண்டாம் என்பதே அர்த்தம்” என்கிறார் ஓஷோ.. இனி, பெண்கள் யோசிக்க வேண்டும். இப்படி பேசும் பெண்களின் கணவர்களும் தங்களை மாற்றிக்கொள்ள வேண்டும்.



> மனைவியை கணவன் படுக்கையறையில் திருப்திபடுத்தி விட்டானா என்ற கேள்வியை யாரும் எழுப்புவதே இல்லை. ஏனென்றால் ஒரு பெண் குழந்தை பெற்று விட்டாலே அவளுடைய கணவன் ஆண்மை மிகுந்தவனாக பாராட்டு பெற்று விடுகிறான்.



## கவித்துவம்

ஒரு முடிவு
அனைத்தையும் மாற்றும் எனில்,
அது முடிவு அல்ல
ஆரம்பம்...!!

- ஜனனி



www.gyanaguru.com
www.gyanaguru.com

# புத்தரின் யசோதரை



எந்த ஒரு மனிதனும் கடைபிடிக்கும் வகையில் கௌதம புத்தரின் போதனைகள் மிகவும் எளிமையானவை. யாருக்கும் குழப்பம் தராதவை. மக்களின் துன்பத்திற்கான உண்மைகளை எடுத்துக்கூறி, உலகிற்கே ஒளியாகத் திகழ்கிறார் புத்தர், ஆனால் அவரும் ஒரு ஞானியின் முன்பு தலைகுனிந்து நிற்க வேண்டியிருந்தது.

யார் அந்த ஞானி என்பதை அறியும் முன்பு, புத்தரின் வாழ்க்கையை மேலோட்டமாக கொஞ்சம் நினைவு படுத்திக்கொள்வோம்.

கபிலவஸ்துவின் அரசி மாயாதேவி கருவுற்று இருந்தபோது, ஆறு தந்தங்கள் கொண்ட ஒரு வெள்ளை யானை தன் வயிற்றில் நுழைந்ததாக கனவு கண்டார். இதை கேட்ட ஜோதிடர்கள், ‘மாயாதேவிக்குப் பிறக்கும் மகன் உலகிற்கே ராஜாவாக இருப்பார், ஆனால் மண்ணுலக சாம்ராஜ்யத்தை ஆள மாட்டார்’ என்று கணித்தார்கள்.

சித்தார்த்த கௌதமர் பிறந்த ஏழாவது நாளில் தாய் மாயாதேவி மறைந்தார். ஆகவே, மாயாவின் சகோதரி மகாபிரஜாபதி புத்தரை வளர்த்தார். தனது மகன் சித்தார்த்தனுக்கு எந்த வழியிலும் துறவு நாட்டம் வந்துவிடக் கூடாது என்பதற்காக அளவுக்கு மீறி ஆனந்தம் கொடுத்து வளர்த்தார் அரசன் சுத்தோதனன். 16 வயதிலேயே யசோதராவை திருமணம் செய்துவைக்கும் ஏற்பாடு செய்தார்.

அதை கண்ட யசோதராவின் நலம் விரும்பிகள், அவளிடம் சித்தார்த்தனின் ஜாதகத்தை சுட்டிக்காட்டினார்கள். சித்தார்த்தனை திருமணம் முடிக்க வேண்டாம் என்று கேட்டுக்கொண்டார்கள். ஆனால், சித்தார்த்தனை மனப்பூர்வமாக விரும்பிய யசோதரா, அவர்கள் சொன்னதை ஏற்காமல் திருமணம் முடித்துக்கொண்டார். அதேநேரம், திருமணத்துக்குப் பின் சித்தார்த்தனின் நிழலாக மாறினார். புத்தரின் அத்தனை பாதைகளிலும் உடனிருந்தார். ராஜ்ஜிய பணிகள், மக்கள் சந்திப்பு, கொண்டாட்டம் என எல்லா நேரமும் சித்தார்த்தனின் பக்கமிருந்து, அவரை அக்கறையுடன் கவனித்துக்கொண்டார்.

சாதாரண மனிதர்கள் தொடங்கி ராஜாங்க அதிகாரிகள் வரையிலான சந்திப்புகளில் புத்தருடன் யசோதராவும் உடனிருந்தாள். மனிதர்கள் வாழ்க்கை பற்றி, இன்ப துன்பங்கள் பற்றி இருவரும் நிறையவே விவாதித்தார்கள். மனிதர்களை வாட்டும் பிணி, மூப்பு, மரணம் பற்றி சித்தார்த்தனுக்கு நிறைய கேள்விகள் எழுந்தன. அதற்கு தெளிவான பதில் யாரிடமும் இல்லை.

சித்தார்த்தனின் தேடல் தீவிரமாவதை அறிந்தே இருந்தார் யசோதரா. அந்த சமயத்தில் அதாவது அவர்களுக்குத் திருமணமாகி 13 வருடங்களுக்குப் பிறகு ராகுலனை பெற்றெடுத்தாள். குழந்தை பிறப்பு காரணமாக சித்தார்த்தனுடன் வெளியே செல்வதற்கு அவளுடைய உடல் ஒத்துழைப்பு கொடுக்கவில்லை. ஆகவே, அவர்கள் சேர்ந்தே இருக்கும் நேரம் குறைந்து போனது. அந்த நேரத்தில்தான் பிணி, மூப்பு, மரணம் பற்றிய கவலையில்லாத ஒரு துறவியை பார்த்தார். அப்படிப்பட்ட துறவுதான் அத்தனை வாழ்க்கை பிரச்னைகளுக்கும் தீர்வாக இருக்க வேண்டும் என்று நினைத்தார் சித்தார்த்தன். அதை உறுதியாக அறிந்து மக்களுக்குத் தெரிவிப்பதற்கு ஆர்வம் கொண்டார். உடனடியாக தன்னுடைய ராஜ யோக வாழ்க்கையை துறப்பதற்கு முடிவு செய்தார்.

அனைவரும் தூங்கிக்கொண்டிருந்த நேரத்தில் அரண்மனையை விட்டு வெளியேறுவதற்கு திட்டம் போட்டார். கடைசி நிமிடத்தில் யசோதராவையும் ராகுலனையும் பார்க்கும் விருப்பம் வந்தது. ஆனால், யசோதரை விழித்துக் கொண்டால், அரண்மனையிலிருந்து தன்னால் வெளியேற முடியாது என்பதை உணர்ந்தே இருந்தார். ஆகவே, யசோதராவிடம் விடை பெற்றுக்கொள்ளாமல், மகனின் முகத்தைப் பார்க்காமல் அரண்மனையிலிருந்து வெளியேறினார்.

# மந்திரச் சொல்

வாழ்க்கையின் எல்லாத் தேவைகளும் ஒரு நாள் தேவையில்லாமல் போய்விடும் என்பதை அறிவதே ஞானம்.

> 12 ஆண்டுகாலம் தன் உடலை வருத்தி பல்வேறு முயற்சிகள் செய்துபார்த்தார். காடு, மலை, நதி கடந்து பயணம் போனார். எங்கு சென்று தேடியும் அவர் தேடிய உண்மை கிடைக்கவில்லை.

12 ஆண்டுகாலம் தன் உடலை வருத்தி பல்வேறு முயற்சிகள் செய்துபார்த்தார். காடு, மலை, நதி கடந்து பயணம் போனார். எங்கு சென்று தேடியும் அவர் தேடிய உண்மை கிடைக்கவில்லை. தேடலின் ஒரு பகுதியாக போதி மரத்தடியில் ஊண் உறக்கமின்றி தவத்திலமர்ந்த 49ம் நாள் ஞானமடைந்தார். 'ஆசையே துன்பங்களுக்குக் காரணம்' என்பதை கண்டறிந்தார். நற்கொள்கை, நன்மொழி, நல்வாழ்வு, நல்லெண்ணம், நல்லார்வம், நன்னடத்தை, நல்முயற்சி மற்றும் நற்சிந்தனை ஆகிய எட்டு வழிகளே வாழ்வில் முக்தி அடைவற்கான வழிகள் என அறிந்து, அதனை மக்களுக்குப் போதித்தார்.


புத்தர் ஞானமடைந்ததும் தன் சீடர்களிடம், 'நான் எனது மனைவி யசோதராவிடம் செல்ல விரும்புகிறேன் அவளுடன் பேச வேண்டும்' என்று தன்னுடைய விருப்பத்தைச் சொன்னார். அதிர்ந்துபோன புத்தரின் சீடர்கள் 'உங்களைப் பற்றி மக்கள் என்ன நினைப்பார்கள். தவம் இயற்றி 12 வருடங் களுக்குப் பிறகு மனைவியின் மீது விருப்பம் வந்துவிட்டதாக நினைக்கமாட்டார்களா..?' என்று தடுக்க முயற்சித்தார்கள்

அதற்கு புத்தர், 'நான் இந்த ஞான நிலையை அடைந்ததற்கு அவளே காரணம்...' என்றபடி சந்திக்கச் சென்றார்.

அரண்மனைக்குச் சென்று முதலில் தந்தையை சந்தித்துப் பேசினார் அதன்பிறகு, மனைவியை தேடிப் போனார். யசோதராவை சந்தித்ததும் பேச முடியாமல் புத்தர் அமைதியாக நின்றார்.

அப்போதும் யசோதரை கோபத்தைக் காட்டவில்லை. "நீங்கள் முழுமையாக மாறியிருப்பதை என்னால் பார்க்க முடிகிறது. ஆனால், இந்த பனிரெண்டு வருடங்கள் எனக்கு மிகவும் துன்பமான காலங்கள். நீங்கள் சென்று விட்டதால் நான் வருந்தவில்லை. நீங்கள் என்னிடம் எதுவும் சொல்லாமல் சென்றதே என் துன்பத்திற்குக் காரணம்.

உண்மையை தேடச் செல்கிறேன் என கூறியிருந்தால் நான் உங்களை தடுத்து நிறுத்தியிருப்பேன் என நினைத்தீர்களா?. நீங்கள் ஞானத்தை தேடி சென்றது குற்றமல்ல. நான் உங்களை தடுத்து நிறுத்தியிருக்க மாட்டேன். ஆனால், நீங்கள் என்னை நம்பவில்லை என்பதுதான் வேதனைப்படுத்திக் கொண்டிருக்கிறது.



அதேநேரம், நீங்கள் அடைந்திருப்பது எதுவோ அதை இங்கிருந்தே அடைந்திருக்க முடியாதா என்பதுதான் என் கேள்வி... உங்களுக்கு ஞானம் கிடைத்திருப்பது உண்மை என்றால், அந்த ஞானம் அரண்மனையில் கிடைத்திருக்காதா..?" என்று கேட்டாள்.

அதற்கு புத்தர், ''நான் இங்கிருந்தே அதை அடைந்தி ருக்கலாம். ஆனால் அப்போது எனக்கு எதுவும் தெரியாது. இப்போது எனக்குத் தெரிகிறது. என்னால் 'இங்கிருந்தே அடைய முடியும், எந்த மலைகளுக்கும் செல்ல வேண்டிய தில்லை, எங்கேயும் செல்ல வேண்டியதில்லை' என சொல்ல முடியும். நான் என்னுள் சென்றாலே போதும், நான் எங்கே இருந்தாலும் அது நிகழும். வெளியே வேறு எங்கும் செல்ல வேண்டியதில்லை. இந்த அரண்மனையும் மற்ற இடங்களைப் போன்றதே. ஆனால் என்னால் இதை இப்போது சொல்ல முடியும், அப்போது இதைப் பற்றி எனக்கு ஒன்றும் தெரியாதே.

நான் உன்னைப் பற்றியோ உன் தைரியத்தைப் பற்றியோ சந்தேகபடவில்லை. உண்மையில் நான் என்னைப் பற்றித் தான் சந்தேகப்பட்டேன். அதனால் என்னை மன்னித்துவிடு. நீ எழுந்துவிட்டால், நம் குழந்தையை நான் பார்த்துவிட்டால் போயிருக்க மாட்டேன். 'என்னுடைய அழகான மனைவியை, இந்த முழுமையான அன்பை, என்னிடம் அவள் கொண்டிருக்கும் முழுமையான நம்பிக்கையை விட்டு விலகிச் செல்ல வேண்டுமா?' என்று நான் யோசிக்க ஆரம்பித்து விடுவேன் என்றே பயந்தேன். எனவே, நான் உன்னை நம்பவில்லை என்பதல்ல, நான் என்னைத்தான் நம்பவில்லை... ஆனால், நான் ஞானமடைவதற்கு நீயே காரணம்..." என்றார்.

புத்தரின் பதிலைக் கேட்ட யசோதரா, ''ஞானத்தை எங்கிருந்தாலும் அடைய முடியும், இங்கிருந்தாலும் அடைந் திருக்கக் கூடும் என நீங்கள் கூறிய பதிலின் உண்மையில் என் உள்ளம் குளிர்ந்தது. இதோ உங்கள் மகன், இவன் உங்களைப் பற்றிக் கேட்கும் போதெல்லாம், 'பொறு, அவர் திரும்பி வருவார். அவரால் மனிதத் தன்மையற்று, கருணையின்றி, கொடூரமாக நடந்துகொள்ள முடியாது. அவர் எதை உணரச் சென்றிருக்கிறாரோ அதற்கு நாள் பிடிக்கும். ஆனால் அதை உணர்ந்த உடனே அவர் செய்யும் முதல் விஷயம் இங்கே திரும்பி வருவதுதான்' என பதில் கூறுவேன். உங்கள் மகனுக்கு நீங்கள் என்ன தரப்போகிறீர்கள்..?" என்று கேட்டாள்.

"பிச்சைப் பாத்திரத்தை தவிர வேறு எதுவும் இல்லை..." என்றவர் தனது பிச்சைப் பாத்திரத்தை அவன் கையில் கொடுத்தார். "என்னிடம் வேறு எதுவும் இல்லை. நான் கண்டறிந்தவற்றை நீயும் கண்டறிய வேண்டும்.." என்று மகனையும் யசோதராவையும் தன்னுடன் அழைத்துச்சென்றார்.

ஞானம் அடைவதற்கும் துறவு நிலை பூணுவதற்கும், காட்டில் வசிப்பதற்கும் எந்த சம்பந்தமும் கிடையாது என்பதை புத்தருக்கு முன்னரே அறிந்திருந்தவள் யசோதரை. ஆனால், புத்தரை போற்றி பாராட்டும் உலகம், இல்லற ஞானியாக வாழ்ந்த யசோதரா பற்றி பேசுவதே இல்லை. தன்னுடைய ஞானத்தை வெளிப்படுத்துவதற்காக யசோதரா நள்ளிரவில் வீட்டை விட்டு வெளியேறி இருந்தால், அவளை தவறான பெண்ணாகவே சித்தரித்திருக்கும்.

அப்படியொரு வீண் பழிக்கு ஆளாகிவிடக் கூடாது என்பதற்காக யசோதரை, தன்னுடைய தலையை மழித்துக் கொண்டாள். பிள்ளையை சரியான வழியில் வளர்த்தாள். வாழ்வின் உண்மை அறிந்திருந்தாலும் எதையும் அறியாத பெண் போலவே வாழ்நாள் யசோதரை.

ஏனென்றால், உண்மைக்கு விளம்பரம் தேவையில்லை.

www.gyanaguru.com
www.gyanaguru.com

# வார்த்தைகளே வரம்

01

ஒரு முறை பொய் சொல்லி மாட்டிக் கொண்டால், பின்னர் அவர் சொல்லும் ஒவ்வொரு சொல்லும் உரசிப் பார்க்கப்படும்.......!!

02

பெயரைச் சுருக்கிக் கூப்பிடுவது அன்பில் அடங்கும். முழுப் பெயரைச் சொல்லி கூப்பிடுவது கோபத்தில் அடங்கும்....!!

03

பேச்சுவார்த்தைக்கு மதிப்பு கொடுக்கப்படாத இடங்களில், ஆயுதங்கள் பேசத் தொடங்குகின்றன.

04

புரிந்துகொள்ள யாரும் இல்லை என்ற நிலை வரும்போது மட்டுமே, அனைவரையும் புரிந்துகொள்ள முடியும்.

05

ஒரு செடி நடுவதுதான், நாளை மீதான மிகப்பெரிய நம்பிக்கை.

06

விதியை முழுமையாக நம்புபவர்களும் சாலையின் இருபுறமும் பார்த்துவிட்டே கடக்கிறார்கள்.

07

எதையும் ஏற்பதற்கு தயாராய் இருப்பதுபோல், இழப்பதற்கும் தயாராய் இருப்பதே தெளிவு.

08

அவமானம் கிடைக்கும் நேரத்தில்தான், ஒருருக்கு உண்மையான தகுதி தெரியவருகிறது.

09

ஒருவரை பிடிக்கிறது என்றால் பலவீனங்களையும் சேர்த்தே பிடிக்கிறது. பிடிக்கவில்லை என்றால் அவரது பலவீனங்களை மட்டுமே வெறுக்கிறோம்.

எல்லா இலக்குகளும் அடையும் வரை மட்டுமே கடினமானவை.

10

ஒருவர் கணிப்பு சரியாகிவிட்டது என்பதற்காக, மற்றவர்கள் அறிவிலியாக மாட்டார்கள்.

www.gyanaguru.com

www.gyanaguru.com

# ரப்பர் பையன் வைக்கோல் தொப்பி எக்குத்தப்பு நம்பிக்கை






ஜாலியாக அதேநேரம் உருப்படியாக பொழுதுபோக்க ஆசைப்படுகிறீர்களா..? அப்படியென்றால் யோசிக்காமல் மங்கி டி லூஃபியின் பயணத்தை ஓடிடியில் பார்த்து ரசியுங்கள்.

யார் இவன்..?

ஜப்பானிய சித்திரக்கதையில் புகழ்பெற்றது மங்கி டி லூஃபி கதாபாத்திரம். இவனது கோக்குமாக்கான லட்சியமும், அதனை அடைவதற்கு மேற்கொள்ளும் சேட்டைகளுமே கிளாசிக் அனுபவம் தரும் ஒன் பீஸ் தொடர்.

லட்சியம் ஒவ்வொரு நபருக்கும் மாறுபடும். இமயமலை ஏறுவது ஒருவருக்கு லட்சியமாக இருக்கும். சொந்த ஊரில் ஒரு குட்டியூண்டு வீடு கட்டுவது லட்சியமாக இருக்கும். காசி நகருக்கு புனிதப்பயணம் செல்வது, மருத்துவராவது, திரைப்படத்தில் நடிப்பது, விளையாட்டு வீரனாவது கோடீஸ்வரனாவது என்றெல்லாம் எத்தனையோ நம்பிக்கைகள் இருக்கின்றன.

ஒருவரது லட்சியம் வெற்றிபெற வேண்டும் என்றால், அந்த லட்சியத்தின் மீது அவருக்கு அசைக்கமுடியாத நம்பிக்கை இருக்கவேண்டும். எந்த ஒரு தருணத்திலும் சிறு அவநம்பிக்கையும் வந்துவிடக்கூடாது. லட்சியத்தை கைவிடலாமா என்று சிந்திக்கவே கூடாது. சிக்கல்கள், பிரச்னைகள் வரும்போதும் லட்சியத்தில் உறுதி காட்டுபவர் மட்டுமே வெல்லமுடியும் என்பதே சக்சஸ் தியரி.

பெரும்பாலான மனிதருக்கு லட்சியங்கள் உயர்வானதாக இருக்கும். ஆனால்,'ஒன் பீஸ்' தொடரின் நாயகன் மங்கி டி லூஃபிக்கு கடற்கொள்ளையர்களின் ராஜாவாகுவது லட்சியம். சின்ன வயதிலிருந்து அவனுடைய உணவு விடுதிக்கு வந்துசெல்லும் கடற்கொள்ளையர்களின் வீரதீரங்களைப் பார்த்து,

www.gyanaguru.com






www.gyanaguru.com

அப்படியொரு ஆசையை நெஞ்சில் வளர்த்துக்கொள்கிறான்.

கடற் கொள்ளையர்கள் என்றாலே, கர்ண கொடூரமானவர்கள். சித்ரவதை செய்வதும், கொள்ளையடிப்பதும் அவர்களுடைய பொழுதுபோக்கு. ஆனால், மங்கி டி லூஃபியின் பார்வை வித்தியாசமானது. எந்த உயிருக்கும் தீமை செய்யாத ஒரு நல்ல கடற்கொள்ளையர்களின் தலைவனாக இருப்பேன் என்று உறுதி ஏற்கிறான். கடற்கொள்ளையர்களின் கனவாக இருக்கும் ஒன் பீஸ் எனும் புதையலைத் தேடி கிளம்புகிறான் டி லூஃபி.

தனியொரு மனிதனாக கிளம்பும் லூஃபிக்கு எந்த ஒரு படையும் ஆயுதங்களும் இல்லை. ஆனாலும், மனம் முழுக்க நம்பிக்கையுடன் பயணத்தைத் தொடங்குகிறான். டெவில் ஃப்ரூட் எனப்படும் ஒரு வகையான பழத்தை முழுமையாக சாப்பிட்டுவிட்டதால், அவனுடைய உடல் சின்ன வயதிலேயே ரப்பராக மாறியிருக்கிறது. அவனுடைய ரப்பர் உடலும், எதிராளியின் பலவீனத்தைக் கண்டறிவதுமே அவனுடைய பலம்.

பொதுவாக லட்சியவாதிகள் எந்தவொரு பொழுதுபோக்கிலும் இறங்கி கவனத்தை சிதறவிட மாட்டார்கள். ஆனால், மங்கி டி லூஃபி வித்தியாசமானவன். ஸ்ட்ரா கேட் தொப்பி அணிந்துகொண்டு கொண்டாட்டமும் கும்மாளமுமாய் பயணிக்கிறான். யார், எத்தனை கிண்டல் கேலி செய்தாலும், தன்னுடைய லட்சியத்தை அச்சமின்றி உரக்கச் சொல்கிறான். தான் இப்போதே கடற்கொள்ளையர்களின் ராஜா என்றே நம்புகிறான். அந்த அசைக்கமுடியாத நம்பிக்கையே, அவனுக்கு சகலமும் கொண்டுவந்து சேர்க்கிறது.

நான்கு திசைகளிலும் விரிந்து கிடக்கும் கடலில் கொடூரமான நிறைய கடற்கொள்ளையர்கள் ராஜ்ஜியம் செய்கிறார்கள். இந்த கடற்கொள்ளையர்களை பிடிப்பதற்கு மிகவும் பலமான கடற்படையும் செயல்பட்டு வருகிறது. இந்த கொள்ளையர்களை வென்று, கடற்படையை ஓரம்கட்டி, ஒன்பீஸ் புதையலை எடுத்து கடற் கொள்ளையர்களின் ராஜாவாக டி லூஃபி எப்படி மாறுகிறான் என்பதுதான் கதை.

லட்சியம் தெளிவாக இருப்பது பாதி வெற்றிக்கு சமம் என்பார்கள். லூஃபிக்குத்தான் லட்சியம் தெள்ளத்தெளிவாக இருக்கிறதே ஆகவே, அவனுடைய டீமுக்கு ஒவ்வொரு நபராக கூட்டாளிகள் வந்து சேர்கிறார்கள்.

கடற்படையில் பாதுகாப்பாக வைத்திருக்கும் வரைபடத்தை எடுக்குச் செல்லும்போது, இந்த உலகிலேயே மிகப்பெரும் வாள் வீரனாக மாறப்போகிறேன் என்று சபதம் எடுத்திருக்கும் ரொரொனோ ஜோரோ முதல் நபராக இணைகிறான். இவனை அடுத்து திருடியும் கடல் பாதை காட்டுபவளுமான நாமி இவர்களுடன் இணைகிறாள். அடுத்து அளவுக்கு அதிகமாக பொய் சொல்பவனும் குறிபார்த்து அடிப்பவனுமான உசூப் மற்றும் திறமையான சமையல்காரனும், சண்டை போடுபவனுமான சாஞ்சியும் சேர்ந்து ஒரு டீமாக மாறுகிறார்கள். இவர்கள் நால்வரும் அறைகுறை என்றாலும், ஒன்றுசேர்ந்து எதிரிகளை அதகளம் செய்கிறார்கள்.

ஒரு நகரத்தை கொள்ளையடித்து, அத்தனை



மக்களையும் சிறைபிடித்து கொடுமைப்படுத்தும் ஜோக்கர் என்ற கடற்கொள்ளையனை சந்திக்கிறார்கள். அந்த ஜோக்கரிடம் லூஃபி தன்னுடைய ரப்பர் வீரத்தைக் காட்டுகிறான். லூஃபி அடித்த அடியில் அவனுடைய தலை சிதறி விழுகிறது. ஆனால், சற்று நேரத்தில் ஜோக்கரின் தலை தானாகவே உடலில் வந்து ஒட்டிக்கொள்கிறது.

அப்போதுதான், அந்த ஜோக்கரும் டெவில் பழத்தை சாப்பிட்டு ரப்பராக மாறியவன் என்ற உண்மை தெரியவருகிறது. அவன் தன்னுடைய உடலில் இருக்கும் ஒவ்வொரு உறுப்பையும் தனித்தனி ஆயுதங்களாக மாற்றி, எதிராளியுடன் சண்டை போடும் திறமைசாலி. அத்தனை உறுப்புகளையும் லூஃபி எதிர்த்து போராடி வெற்றியடைவது பிரமிப்பும் ஆச்சர்யமும் தரும் காட்சி.

அதேபோன்று, சுறா மண்டை கொள்ளையன், ஐந்து கத்தி வீரன் என நிறைய கடற்கொள்ளையர்களை எதிர்த்து நிற்கிறான். எந்த தருணங்களிலும் நண்பர்களையும் ஸ்ட்ரா தொப்பியையும் லூஃபி விட்டுத்தருவதே இல்லை. ஆபத்து நேரங்களில் ‘நண்பேண்டா’ என்றபடி உதவிக்கு வந்து, உயிரைக் கொடுத்து காப்பாற்றுகிறான். ஒவ்வொரு சண்டைக் காட்சிகளும் பிரமாண்டம் மட்டுமின்றி லாஜிக் மீறாமல் சிரிக்கவும் வைக்கின்றன. அதேநேரம், மனிதாபிமானத்தையும் அன்பையும் ஒவ்வொரு காட்சியிலும் சித்தரிக்கிறான் லூஃபி.



“கடற்கொள்ளையர்களை பிடிப்பதற்கு மிகவும் பலமான கடற்படையும் செயல்பட்டு வருகிறது. இந்த கொள்ளையர்களை வென்று, கடற்படையை ஓரம்கட்டி, ஒன்பீஸ் புதையலை எடுத்து கடற் கொள்ளையர்களின் ராஜாவாக டி லூஃபி எப்படி மாறுகிறான் என்பதுதான் கதை.”

புதையல் வேட்டையே மெயின் கதை என்றாலும், அவ்வப்போது குட்டியூண்டாக வந்துசெல்லும் கிளைக் கதைகளும் மெய் சிலிர்க்க வைக்கின்றன. குறிப்பாக சமையல் வீரன் சாஞ்சியின் சிறுவயது வாழ்வு ஒரு நெகிழ்ச்சி கவிதை.

ஒரு கடற் பயணத்தில் சிறுவன் சாஞ்சியும் மீசையில் சடை போட்டிருக்கும் கொள்ளைக்கார செஃப் ஜெப்பும் சந்திக்கிறார்கள். திடீரென புயலில் சிக்கி கப்பல் மூழ்க, இந்த இருவர் மட்டுமே தப்பி, ஒரு குட்டி மலையில் தஞ்சமடைகிறார்கள். ஒரு குட்டி மூட்டை நிறைய உணவுப் பொருட்களை சாஞ்சியிடம் கொடுக்கும் செஃப், ஒரு பெரிய மூட்டையை தனக்கென்று வைத்துக்கொள்கிறான். வேறு எந்த உணவும் இல்லை என்பதால் உதவி வரும் வரையில் இவற்றை மட்டுமே வைத்து சமாளித்துக்கொள்ள வேண்டும் என்று சிறுவனுக்கு கட்டளை போடுகிறான். ஆளுக்கு ஒரு பக்கம் அமர்ந்து மீட்பு கப்பலுக்காக காத்திருக்கிறார்கள்.

கொஞ்சம் கொஞ்சமாக சாப்பிட்டாலும் கொஞ்ச நாட்களுக்குள் அத்தனையும் தீர்ந்துவிடுகிறது. சிறுவன் சாஞ்சிக்கு பசியும் கோபமும் அதிகமாகிறது. செஃப் வைத்திருக்கும் பெரிய மூட்டையில் நிறைய உணவு மிச்சமிருக்கும் என்ற நம்பிக்கையில், கையில் கத்தி எடுத்துக்கொண்டு கிளம்புகிறான். தனக்கு உணவு தரவில்லை எல்லாம் செஃப்பை கொலை செய்வதற்கும் தயாராகச் செல்கிறான்.

செஃப் இருக்கும் இடத்திற்குச் சென்றதும் பெரிய மூட்டை அப்படியே பிரிக்கப்படாமல் இருப்பதைப் பார்க்கிறான். உடனே அதை கத்தியால் வெட்டிப் பார்க்க... உள்ளே தங்கமும், நாணயங்களும் மட்டுமே இருக்கின்றன. அதாவது உணவுப் பொருட்கள் அனைத்தையும் சாஞ்சிக்கே



கொடுத்துவிட்டான் என்பது தெரியவருகிறது. பசியைத் தாங்கமுடியாமல் தன்னுடைய ஒரு காலை வெட்டி சாப்பிட்டிருக்கிறான் என்பதும் புரிகிறது. யாரோ ஒரு சிறுவனுக்காக தன்னுடைய வாழ்க்கையை பணயம் வைத்த கொள்ளைக்காரனின் மனிதாபிமானம் மயிலிறகாய் மனதை வருடிச் செல்கிறது.

இப்படி, தொடர் முழுக்கவே மனதை மலரச்செய்யும் காட்சிகளும், நம்பிக்கையூட்டும் வசனங்களும், களிப்பூட்டும் நடிப்பும் விரவிக்கிடக்கின்றன. மனதுக்கு உற்சாகம் தேவைப்படும் நேரத்தில், இந்த தொடரை கொஞ்ச நேரம் பாருங்கள். லூஃபியின் நம்பிக்கையும் மனிதமும் நிச்சயம் உங்களுக்கும் ஒட்டிக்கொள்ளும்.

குடும்பத்தோடு குறிப்பாக குழந்தைகளுடன் பாருங்கள். அதுவே, மகிழ்ச்சி.

**மந்திரச் சொல்**

வாழ்க்கையின் எல்லாத் தேவைகளும் ஒரு நாள் தேவையில்லாமல் போய்விடும் என்பதை அறிவதே ஞானம்.



# நேரத்தை முதலீடு செய்யுங்கள்...

தங்கள் தேவைக்குப் போக மீதமிருக்கும் பணத்தை மனிதர்கள் ஷேர் மார்க்கெட், தங்கம், நிலத்தில் முதலீடு செய்கிறார்கள். வாழ்வின் அவசர தேவைக்கு இந்த முதலீடுகளை பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

இதேபோல் காலத்தை முதலீடு செய்ய முடியுமா..? நமக்குத் தேவையான நேரத்தில் காலத்தை திரும்ப பெற்றுக்கொள்ளும் வசதி இருந்தால் எத்தனை சிறப்பாக இருக்கும்...?

நேரத்தையும் முதலீடு செய்ய முடியும் என்று ஒரு புதிய வழியை சுவிட்சர்லாந்து காட்டியுள்ளது.

ஆம், சுவிஸ் நாட்டில் பணத்தை வங்கியில் சேமிப்பது போன்று, ஒவ்வொரு மனிதரும் காலத்தையும் சேமித்து வைத்து, பின்னர் பயன்படுத்திக் கொள்வதற்கு வழிவகை செய்திருக்கிறார்கள். இதற்காக டைம் பேங்க் எனப்படும் கால வங்கியை சுவிஸ் நாட்டின் சமூகப் பாதுகாப்பு அமைச்சகம் நடத்திவருகிறது. இது ஒரு புதுவகையிலான முதியோர் பென்ஷன் திட்டம் என்றும் சொல்லலாம்.

ஒரு மனிதன் ஆரோக்கியமாக இருக்கும் காலங்களில் தங்கள் நேரத்தை இந்த கால வங்கியில் டெபாசிட் செய்ய முடியும். அதாவது ஆரோக்கியமாக இருக்கும் நபர்கள் தங்களுக்குக் கிடைக்கும் ஓய்வு நேரத்தில், உதவி தேவைப்படும் முதியவர் அல்லது நோயாளிக்கு பாதுகாப்பு கொடுத்து பணிவிடை செய்ய வேண்டும்.

அதாவது கல்லூரி மாணவன் ஒருவன், அவனுடைய கல்லூரி விடுமுறை தினத்தில் எட்டு மணி நேரம், யாரேனும் ஒரு முதியவருக்கு உதவி செய்கிறார் என்றால், அந்த எட்டு மணி நேரம் அவரது பெயரில் கால வங்கியில் சேமிக்கப்படும். இங்கு சேமிப்பதற்கு எட்டு மணி நேரம் என்று குறைந்தபட்ச கணக்கு எதுவும் கிடையாது. தங்களால் எத்தனை மணி நேரம் பிறருக்கு உதவி செய்ய முடியுமோ, அதை செய்யலாம். அது அரை மணி நேரமாக இருக்கலாம், நாலைந்து நாட்கள், சில மாதங்களாகவும் இருக்கலாம். இப்படி செய்யப்படும் உதவிகள் எல்லாம் கால வங்கியில் முதலீடு செய்யப்படுகிறது. இதை அரசு சட்டபூர்வமாக பதிந்துகொள்கிறது.

ஏதேனும் விபத்து, நோய் ஏற்படும் நேரத்தில், அவர் முதலீடு செய்திருக்கும் நேரத்தை வங்கியில் இருந்து எடுத்து பயன்படுத்திக் கொள்ளலாம். ஆம், அவர் எத்தனை மணி நேரங்கள் பிறருக்கு உதவி செய்திருக்கிறாரோ, அத்தனை மணி நேர உதவியை எந்த செலவும் இல்லாமல் அவர் திரும்ப பெற்றுக்கொள்ள முடியும். இவருக்கு எப்படிப்பட்ட உதவி தேவைப்படுகிறதோ, அதற்கு ஏற்ற நபரை கால வங்கி அனுப்பி வைக்கும். இப்படி ஒரு நடைமுறை இருப்பதால், வயதானவர்களுக்கு சுவிஸ் நாட்டில் போதிய ஆதரவும் உதவியும் எளிதாகக் கிடைக்கிறது. இளம் வயதில் தாங்கள் செய்த கால முதலீட்டை எடுத்து, தங்களுக்குத் தேவையான நேரங்களில் உதவி பெற்றுக் கொள்கிறார்கள்.




இந்த திட்டத்தில் கணக்கு தொடங்க விரும்புபவர்கள் ஆரோக்கியமாகவும், சேவை மனப்பான்மையுடனும் இருக்க வேண்டும் என்பதுதான் அரசு விதித்திருக்கும் ஒரே ஒரு நிபந்தனை. ஒவ்வொரு நபருக்கும் அவர் செய்திருக்கும் சேவையை பதிவு செய்து, நேர சேமிப்பு அட்டை கொடுக்கிறார்கள். நாம் கொடுத்த உதவியை திரும்பப் பெறுவதால், முதியவர்கள் எந்த தாழ்வு மனப்பான்மையும் கொள்ளாமல், உரிமையுடன் இதனை பயன்படுத்திக்கொள்ள முடிகிறது.

இந்த திட்டத்தை நாடாளுமன்றத்தில் சட்டமியற்றி நிறை வேற்றி பயன்பாட்டுக்குக் கொண்டுவந்திருக்கிறார்கள். இந்த திட்டத்துக்கு மக்களிடம் நல்ல வரவேற்பும் கிடைத்திருக்கிறது.

உலகமெங்கும் தொடரவேண்டிய திட்டம்.




www.gyanaguru.com

# நல்ல காரணங்களுக்கு கோபம் சரிதானா..?

‘படிச்சுப் படிச்சு சொல்லியிருக்கேன். வெள்ளை சட்டையை வாஷிங் மிஷினில் போடாதேன்னு... இப்ப பாரு கலர் ஒட்டியிருச்சு...’ என்று வீசி எறியும் ஆணின் கோபத்தில் கொஞ்சம் நியாயம் இருப்பதாகத் தெரியலாம். ஆனால், அது உண்மையல்ல. தான் சொல்வது மட்டுமே சரி என்று நினைக்கும் குணமே, அவரது கோபத்திற்கு முக்கிய காரணமாக இருக்கிறது.

அதேபோல், நிறைவேறாத ஆசைகளும் கோபத்தைக் கொண்டுவருகிறது. வீட்டில் பிரியாணி சமைக்கப்பட்டிருக்கும் என்று ஆசையுடன் வருபவருக்கு, தயிர் சாதம் பரிமாறினால் கோபம் வருகிறது. பள்ளியில் இருந்து வந்ததும் பிள்ளைகள் தங்கள் ஷூவை சரியான இடத்தில் வைக்க வேண்டும் என்ற நியதியை அவர்கள் அசட்டையாக தட்டிக்கழிக்கும்போது கோபம் வருகிறது.

பல முறை சொல்லிக் கொடுத்தும் தப்புத்தப்பாக செய்யும் ஊழியர்கள் மீது கோபம் வருகிறது. பொய் சொல்பவர்கள், சட்டத்தை மீறுபவர்கள் மீதும் சிலருக்கு கோபம் வருகிறது. குடும்ப பிரச்னை, பண பிரச்னை, வேலை, உடல் நல குறைபாடு காரணமாகவும் கோபம் வெடிக்கிறது.

கோபத்தை ஒவ்வொரு நபரும் ஒரு விதத்தில் வெளிப்படுத்துகிறார்கள். மேல் அதிகாரியிடம் கோபத்தைக் காட்ட முடியாமல் அடக்கி வைக்கிறார்கள். அங்கு காட்ட முடியாத கோபத்தை வீட்டில் அல்லது வெளியே உள்ளவர்கள் மீது காட்டுகிறார்கள். தனக்கு





www.gyanaguru.com

# மந்திரச் சொல்

மகிழ்ச்சியை பிறருக்குக் கொடுத்தால்,
அது இரட்டிப்பாகத் திரும்பவரும்.



துறவியின் தலையில் ஏதோ ஒன்று விழுந்தது. யாரோ தன்னுடைய தியானத்தைக் கலைப்பதற்கு கல்லை எறிந்து விளையாடுகிறார்கள் என்று நினைத்து கடும் கோபத்துடன் திரும்பிப்பார்த்தார். அங்கே யாருமே இல்லை. மரத்தை அண்ணாந்து பார்த்தார். காற்றில் ஒரு பழம் கனிந்து தலையில் விழுந்திருக்கிறது. ஆகவே அங்கே காற்றைத் தவிர வேறு எதுவும் இல்லை.

கீழ் உள்ளவர்கள் தவறு செய்துவிட்டால் கடுமையான வார்த்தைகளில் கோபத்தைக் காட்டுகிறார்கள். எப்படி வெளிப்படுகிறது என்றாலும் கோபம் தீய விளைவுகளையே ஏற்படுத்துகிறது. வெளிப்படையான கோபம் எதிரியை உருவாக்குகிறது. உள்ளுக்குள் வரும் கோபம் உடலுக்கு எதிரியாகிறது.

கோபத்தைக் குறைக்கணும்னு நினைக்கிறேன்... ஆனா முடியவே இல்லை என்று பலரும் சொல்வதுண்டு. அவர்களுக்காகவே இந்த குட்டிக் கதை.

ஊருக்குள் ஒரு துறவி இருந்தார். மருத்துவம் செய்வதிலும், போர்க்கலையிலும் கில்லாடி. ஆனால், மூக்கு நுனியில் கோபம் நிற்கும். அதனால், அவரிடம் பேசுவதற்கே மக்கள் பயந்தார்கள். தன்னுடைய குறையை உணர்ந்துகொண்டு, கோபத்தைக் குறைப்பதற்கு முடிவெடுத்தார். தன்னை யாரும் தொந்தரவு செய்யக்கூடாது என்பதற்காக அடர்ந்த காட்டுக்குள் நுழைந்து ஒரு மரத்தின் கீழே அமர்ந்து தியானம் செய்தார். கோபத்தைக் குறைக்கும் வழியை தியானத்தில் தேடிக்கொண்டு இருந்தார்.

அப்போது, துறவியின் தலையில் ஏதோ ஒன்று விழுந்தது. யாரோ தன்னுடைய தியானத்தைக் கலைப்பதற்கு கல்லை எறிந்து விளையாடுகிறார்கள் என்று நினைத்து கடும் கோபத்துடன் திரும்பிப்பார்த்தார். அங்கே யாருமே இல்லை. மரத்தை அண்ணாந்து பார்த்தார். காற்றில் ஒரு பழம் கனிந்து தலையில் விழுந்திருக்கிறது. ஆகவே அங்கே காற்றைத் தவிர வேறு எதுவும் இல்லை.

இப்போது யார் மீது கோபத்தைக் காட்டுவது என்று தெரியாமல் தடுமாறிய துறவி... சிந்தித்துப் பார்த்தார். கோபம் வருவதற்கு வெளியே இருந்து யாரும் காரணமாக இருப்பதில்லை, நானே காரணமாக இருக்கிறேன் என்பதை உணர்ந்துகொண்டார். அதுதான் ஞானம். முட்டாள் என்று ஒருவர் திட்டுவதை ஏற்றுக்கொள்வதன் மூலமே கோபம் வருகிறது. அவர் சொல்வதால் முட்டாளாகப் போவதில்லை என்பது புரிந்துவிடால் கோபம் வராது.

பொதுவாக மனிதர்கள் சூடான எண்ணெய் சட்டி போலவே இருக்கிறார்கள். தெரிந்து கை வைத்தாலும், தெரியாமல் கை வைத்தாலும் சுடவே செய்யும். பட்டென உதறுவார்கள். அப்படித்தான் யார், என்ன சொன்னாலும் சட்டென கோபப்படுகிறார்கள்.

கோபத்தைக் குறைப்பது மிகவும் எளிது. ஆம், கோபப்படுவதை நிறுத்திக்கொள்ள வேண்டும் என்று ஆசைப்படுபவர்கள், தங்கள் ஆழ்மனதில் ஒரு சங்கல்பம் எடுத்துக்கொள்ள வேண்டும். அதாவது, இன்று என்னை யாரும் கோபப்படுத்த முடியாது. யாராவது பிடிக்காத விஷயங்கள் பேசினால், அந்த இடத்தைவிட்டு நகர்ந்துவிடுவேன். அப்படி நகர முடியவில்லை என்றால், அந்த வார்த்தைகள் மூலம் என்னை காயப்படுத்த முடியாது என்று அழுத்தமாக சொல்லிக்கொள்வேன் என்று மனதுக்குள் உறுதி எடுக்க வேண்டும். அதனை நடைமுறைப்படுத்தவும் வேண்டும்.

எந்த காரணத்துக்காகவும் கோபத்தை அடக்கிவைக்க முயற்சிக்காதீர்கள். அதுவும் நிச்சயம் எதிர்விளைவையே உருவாக்கும். கோபமின்றி வாழும் வழிகளை கண்டுகொள்வதே முக்கியம்.

எனவே, கோபம் ஏற்படும் நேரத்தில் அதிலிருந்து தப்புவதற்கு சில வழிகள் இருக்கின்றன. கோபம் வரும்போது தண்ணீர் குடிப்பது, ஒன்று முதல் நூறு வரை எண்ணுவது, உடனே உடற்பயிற்சி செய்வது என்று மனதை திசை திருப்பிவிடலாம்.



அதுசரி, நியாயமான விஷயங்களுக்கு கோபப்படலாமா..?

விஷத்தில் நல்ல விஷம், கெட்ட விஷம் என்று எதுவுமில்லை. நியாயமான விஷயத்துக்கும் கோபப்படுவது சரியல்ல. தங்கையை கிண்டல் செய்த ஒருவனை பார்த்த அண்ணன், கோபத்தில் பக்கத்தில் இருந்த கல்லை எடுத்து அடித்தார். அதனால் கீழே விழுந்தவர் சுவரில் மோதி இறந்தே போனார். ஒரு கண நேரத்தில் எழுந்த கோபத்திற்காக அவர் சிறையில் சில ஆண்டுகள் கழிக்க நேர்ந்தது. அந்த குடும்பமே பெரும் பழிச்சொல்லுக்கு ஆளானது.

ஆகவே, கோபத்தை விட்டுத் தள்ளுங்கள்.





# ஞானம் தரும் திருத்தலம்

ஞானகுருவுடன் பேசிக் கொண்டிருந்த மகேந்திரன், ”புத்தர் ஞானம் அடைவதற்கு வழி காட்டிவிட்டார். எல்லா மதங்களிலும் நிம்மதியாக வாழ்வதற்கான வழிகள் காட்டப்பட்டுள்ளன. ஆனால் மக்கள் எந்த கொள்கைகளையும் பின்பற்றுவதில்லை... ஏன்...” என்று கேட்டார்.

‘’மனிதர்கள் விசித்திரமானவர்கள். நன்றாகப் படித்தால் நல்ல வேலை கிடைக்கும் என்று தெரியவந்தாலும் படிக்க மாட்டார்கள். முறையாக ஆய்வு செய்து தொழில் தொடங்கினால் வெற்றி கிடைக்கும் என்பது தெரிந்தாலும், ஆய்வு செய்ய மாட்டார்கள். தினமும் முறையாக பயிற்சி எடுத்துக்கொண்டால் விளையாட்டில் வெற்றி நிச்சயம் என்றாலும் பயிற்சிக்கு முயற்சிக்க மாட்டார்கள். ஆனால், வெற்றி மட்டும் வேண்டும் என்று ஆசைப்படுவார்கள். ஆன்மிகத்திலும் மனிதர்கள் அப்படிப்பட்ட சோம்பேறிகள்தான். தம்மபதத்தில் புத்தர் சொன்னாலும், கீதையில் கண்ணன் சொன்னாலும், குரானில் முகமது நபி சொன்னாலும்... அவற்றை எல்லாம் ஆர்வமாக கேட்டுக்கொள்வார்களே தவிர, அதன் வழியில் நடக்க மாட்டார்கள்....”

“ஏன்..?”

www.gyanaguru.com

# மந்திரச் சொல்

ஆரோக்கியமும் பணமும் இழந்த பின்னரே, அவற்றின் அருமை தெரிய வரும்.

''அவர்களுக்கு இப்போதைய வாழ்வு சொகுசாகவும் வசதியாகவும் இருக்கிறது. முன்னோர் காட்டிய வழி, பெற்றோர் காட்டிய வழியில் செல்வது அவர்களுக்கு பிடித்திருக்கிறது. ஆகவே, புதிய வழியில் நடக்க விரும்புவதில்லை. அது, கஷ்டப்பட்டு மரத்திலேறி மாங்காய் பறிப்பது போன்றது. அப்படி ஒரு சூழல் நிகழ்வதற்கு அவர் கள் மனதில் பெரு மாற்றம் நிகழ வேண்டும்....”

“அப்படியொரு மாற்றம் எப்போது நிகழும்..?”

“யாருக்கு எந்த கணத்தில் மாற்றம் நிகழும் என்பதை சொல்ல முடியாது. காந்திக்கு ரயிலில் கிடைத்த அவமானம் மாற்றத்தை உருவாக்கியது. சிவாஜிக்கு அவரது அன்னை சொன்ன கதைகள் மாற்றத்தை உருவாக்கியது. புத்தனுக்கு மக்கள் படும் துன்பத்தைக் கண்டு மாற்றம் உருவானது. பெரும்பாலான மனிதர்கள் ஒரு தோல்வி அல்லது பெரும் இழப்புக்குப் பிறகே உண்மையைத் தேடி ஓடுகிறார்கள்...”

”வாழ்வின் உண்மையை கோயில்கள் அல்லது ஏதேனும் திருத்தலம் உணர வைக்காதா..?”

''கோயிலில் கடவுள் சிலையை தரிசனம் செய்வதும், பிரசாதம் வாங்குவதும் மக்களுடைய நோக்கமாக இருக்கிறதே தவிர, உண்மையைக் கண்டறிவதும், துன்பத்திற்கு விடை தேடுவதும் அல்ல. ஆகவே, கோயிலில் ஒருபோதும் மனிதருக்கு விழிப்புணர்வு கிடைப்பதில்லை.

ஆத்மார்த்தமாகத் தேடுபவர்களுக்கு விழிப்பு தரக்கூடிய இடம் என்று, அரசு மருத்துவமனையைச் சொல்லலாம். இந்த மருத்துவமனையில் எப்படிப்பட்ட நோயாளிகள் எல்லாம் இருக்கிறார்கள், எப்படியெல்லாம் துன்பம் அனுபவிக்கிறார்கள் என்பதை ஒரு பார்வையாளனாக ஒரே ஒரு நாள் தரிசனம் செய்தால் போதும், நிச்சயம் மனதுக்குள் பெரும் மாற்றம் உருவாகும். இந்த மனிதர்களுக்கு முன்பு தங்களுடைய கஷ்டங்களுக்கு அர்த்தமே இல்லையென்று தோன்றிவிடும்.

அதேநேரம், காலமெல்லாம் அந்த மருத்துவமனையில் ஊறிக்கிடக்கும் ஊழியர்களும், மருத்துவர்களும், நோயாளிகளும் அந்த காட்சிகளைக் கண்டு மனம் மாறுவதில்லை என்பதையும் அறிந்திருக்க வேண்டும். ஏனென்றால், அவர்களிடம் தேடுதல் இருப்பதில்லை. எனவே, அவர்களுக்கு மருத்துவமனையில் நடப்பது எல்லாமே இயல்பான ஒன்றாகவே தெரியும். அதனால், இந்த இடத்தில் அவர்களுக்கு விழிப்பு ஏற்படுவதற்கு வாய்ப்பு இல்லை...”

“நீங்கள் சொல்வது எனக்குப் புரிகிறது. உண்மை எதுவென தெரிகிறது. இவற்றை அறிந்தபிறகும் எனக்கு மகிழ்ச்சி வரவில்லை. என்னை நான் சோர்வாகவே உணர்கிறேன்... இது ஏன்..?”

''சோர்வாக இருக்கிறேன், களைப்பாக இருக்கிறேன் என்று ஒருவர் சொல்கிறார் என்றால், அவர் மிகவும் கடுமையாக உழைத்துவிட்டு ஓய்வைத் தேடுகிறார் என்று அர்த்தம் இல்லை. அவர் அன்றன்றைய பணியை முடிக்கவே சிரமப்படுகிறார் என்றும், மனதிற்கு அழுத்தம் தரும் பணிகளில் ஈடுபடுகிறார் என்றும்தான் அர்த்தம். மனதுக்குப் பிடித்த வேலையை செய்பவர்களுக்கு ஒருபோதும் சோர்வு தோன்றுவதே இல்லை. அதனால்தான் ஆய்வுக் கூடங்களில் பணியாற்றுபவர்கள், சினிமா கலைஞர்கள், அரசியல்வாதிகள் தொடர்ந்து பல மணி நேரம் சுறுசுறுப்பாகவும், மலர்ச்சியாகவும் இருக்கிறார்கள்.

எனவே, எதுவெல்லாம் மலர்ச்சி தருகிறதோ அவற்றை செய்ய வேண்டும் அல்லது எது செய்தாலும் அதனை மகிழ்ச்சியுடன் செய்ய வேண்டும். இதனால் சோர்வு காணாமல் போய்விடும்...” என்றார் ஞானகுரு.

மலர்ந்தார் மகேந்திரன்.

> யாருக்கு எந்த கணத்தில் மாற்றம் நிகழும் என்பதை சொல்ல முடியாது. காந்திக்கு ரயிலில் கிடைத்த அவமானம் மாற்றத்தை உருவாக்கியது. சிவாஜிக்கு அவரது அன்னை சொன்ன கதைகள் மாற்றத்தை உருவாக்கியது. புத்தனுக்கு மக்கள் படும் துன்பத்தைக் கண்டு மாற்றம் உருவானது.







# எடிசன் சொன்னா கேட்டுக்கணும்..!

பள்ளியில் கல்வி கற்க தகுதியில்லாத முட்டாள் என்று 8 வயதில் ஒரு ஆசிரியரால் கணிக்கப் பட்டவர் தாமஸ் ஆல்வா எடிசன். அவர்தான், இந்த உலகிலேயே அதிக எண்ணிக்கையிலான அதாவது, 1,093 கண்டுபிடிப்புகளை செய்த விஞ்ஞானி.

எப்படி அவரால் இத்தனை கண்டுபிடிப்புகளை செய்ய முடிந்தது..?

ஏதேனும் ஒன்று பற்றி ஆய்வு செய்ய முடிவு செய்தார் என்றால், அந்த பொருள் பற்றி வெளியாகியிருக்கும் அத்தனை தகவல்களையும் ஒன்றுவிடாமல் அறிந்துகொள்வார். அதாவது குறிப்பிட்ட பொருள் பற்றி மற்றவர்கள் செய்துமுடித்த ஆய்வுகளின் முடிவுகளில் இருந்து, தன்னுடைய ஆய்வைத் தொடங்குவார்.

இந்த வகையில் குறிப்பிட்ட பொருள் பற்றி மற்றவர்களின் ஆய்வுகளையும் அனுபவங்களையும் எடிசன் திறமையாக பயன்படுத்திக் கொண்டார். இதனால் அவர்களுக்குக் கிடைத்த தோல்வி தனக்குக் கிடைத்துவிடாமல் தன்னைத்தானே காப்பாற்றிக் கொண்டார். இதுதான் வெற்றியாளர்களுக்கு எடிசன் கற்றுத்தரும் முக்கிய பாடம்.



ஒரு வேலையை வெற்றிகரமாக செய்யும் வழி குறித்து எடிசனிடம் கேட்கப்பட்டது. அதற்கு எடிசன், “தோல்வி அடைந்தவர்களின் அனுபவங்களை நாம் பயன்படுத்தி க்கொள்ள வேண்டும். ஏனென்றால் அந்த அறிவை பெறுவதற்கு நம் வாழ்நாள் முழுவதும் செலவழிக்க வேண்டி வரும். இதனை தொடக்கமாக வைத்துக்கொண்டு மேலும் அதிக வெற்றிகளைக் குவிக்கப் புது வழிகள் உள்ளனவா என்று யோசிக்க வேண்டும். ஒருவர் ஏன் தோல்வியடைந்தார் என்பதை அறிந்துகொண்டால், அந்த அம்சத்தை நம்



ஞானகுரு
மகிழ்ச்சி
டிஜிட்டல் மாத இதழ் 2 - 10

நிறுவனர்
**எஸ்.கே.முருகன்**

ஆசிரியர்
**எம்.நிர்மல்**

வெளியீட்டாளர்
**எம்.நிலா**

வடிவமைப்பு
**வி.கிராபிக்ஸ்**
**கே.எம்.பிரசன்னா**

நிர்வாக இயக்குனர்
**அரசு கிருத்திகா**

முதன்மை செயல் அலுவலர்
**மணியன் கலியமூர்த்தி**

ஒருங்கிணைப்பாளர்
**ரத்தினபாண்டியன்**

**ஞானகுரு பப்ளிகேஷன் மூலம் மகிழ்ச்சி இதழ் வெளியிடப்படுகிறது. அலுவலக முகவரி :**

ஜி2, கோவிந்த் அபார்ட்மென்ட்,
6, ஏஜிஎஸ் காலனி 4வது தெரு,
கொட்டிவாக்கம், சென்னை - 41.
**தொடர்புக்கு:** +91 98409 03586,
72997 53999, 98844 53014
**இ.மெயில் :** skmnila1@gmail.com
**இணையதளம் :** gyanaguru.com



வாழ்க்கையிலிருந்து நீக்கிவிட முடியும்...” என்றார். ஒரு முறை தாமஸ் ஆல்வா எடிசனிடம் கடவுளின் கருணை பற்றி கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு அவர் சிரித்துக்கொண்டே, "இன்று மதியம் எனக்கு நல்ல மீன் உணவு கிடைத்தது. அது கடவுளின் கருணை என்று நான் எடுத்துக்கொண்டால், நான் உண்ட மீனையும் கடவுள்தானே படைத்திருக்க வேண்டும். அந்த மீனிடம் கடவுள் காட்டிய கருணை என்ன?" என்று கேட்டார். பின்னர் அவரே, ”கடவுள் என்று ஒன்றும் இல்லை... எல்லாம் இயற்கைதான்..! இயற்கைதான் எல்லாவற்றையும் தீர்மானிக்கிறது. இயற்கைக்குக் கருணையோ, கொடூரத்தன்மையோ கிடையாது. இயற்கை தன் போக்கில் செயல்களைச் செய்து முடிக்கிறது” என்றார்.

## வெற்றிக்கு எடிசன் காட்டும் சில சூத்திரங்கள் இங்கே.

● நான் ஒருபோதும் தவறுகளைத் தோல்விகள் என்று கருதுவதில்லை, அவை வெற்றி பெற முடியாத வழிகளைக் கண்டுபிடிப்பதற்கான வாய்ப்புகளாகும்.

● தோல்வி அடைந்த பலர், அவர்கள் எடுத்த செயலை முடிக்காமல் கைவிடும்போது, வெற்றிக்கு எவ்வளவு அருகில் இருக்கிறோம் என்பதை அறிவதில்லை.

● என் முயற்சிகள் என்னைப் பல முறை கைவிட்டதுண்டு. நான் ஒரு முறைகூட என் முயற்சியை கை விட்டதில்லை.!

● வெற்றி என்பது ஒரு சதவிகிதம் சிந்தனையும், தொண்ணூற்றொன்பது சதவிகித உழைப்பும் சேர்ந்ததுதான்.

● நான் தோல்வி அடையவில்லை, வெற்றியடைய முடியாத பத்தாயிரம் வழிகளைக் கண்டுபிடித்திருக்கிறேன்.

● ஒரு செயலைச் சிறப்பாக செய்வதற்கு சிறந்த வழி, அதனை தேடிக்கண்டறிவதே.

● மிகப்பெரிய சாதனைகள் சாதிக்கப்படுவது வலிமையினால் இல்லை, விடா முயற்சியினால்தான்.

● ஒரு யோசனையின் மதிப்பு அதை பயன்படுத்துவதிலேயே இருக்கின்றது.

● ஒரு யோசனையை நிராகரிப்பதற்கு முன், அதைப் பற்றிக் குறைந்தது ஐந்து நல்ல விஷயங்களைக் கண்டறியுங்கள்.

● பெரும்பாலான மக்களின் பிரச்சனை என்னவென்றால், தொடங்குவதற்கு முன்பே அவர்கள் வெளியேறி விடுகிறார்கள்.

● மனிதர்களின் உண்மையான மூலதனம் நேரம் மட்டுமே. அதனை மட்டுமே அவனால் இழந்தால் பெற முடியாது.

● ஆயிரம் யோசனைகளை வைத்துக் கொண்டு ஒன்றும் செய்யாமலிருக்கும் நபரை விட, ஒரு யோசனையை வைத்துக் கொண்டு அதைச் செயற்படுத்த முயற்சிக்கும் நபர் மீது எனக்கு அதிக மரியாதை உண்டு.

● நீங்கள் தோல்வியுறும் ஒவ்வொரு முறையும், மற்றொரு தவறான தெரிவை நீக்கிவிட்டீர்கள்.

● மோசமான அணுகுமுறையால் நல்ல நோக்கத்திற்கும் மோசமான முடிவுகளே கிடைக்கும்.





## கவித்துவம்

யாரையோ ரசித்து,
யாரையோ நேசித்து,
யாரோடோ வாழ்ந்து,
யாரிடமோ எல்லாம்
பகிர்ந்து பின்பு,
யாரோவாகிப் போகும்
இச்சிறு வாழ்வு...!!!
- வெ.பூபதி



# ஆவியுடன் பேச ஆசையா..?

ஒரு குடும்பத்தை ஞானகுருவிடம் அழைத்துவந்தார் மகேந்திரன். அத்தனை பேரின் முகத்திலும் இருள் படர்ந்திருந்தது. அந்த குடும்பத்தின் ஒரே மகன் பைக் விபத்தில் உயிரை இழந்துவிட்டானாம். அவனுடைய இழப்பில் மீளமுடியாமல் தவிப்பவர்களுக்கு ஆறுதல் வேண்டும் என்று ஞானகுருவிடம் கேட்டுக்கொண்டார் மகேந்திரன்.

இறந்துபோனவனின் தாய், தந்தையரிடம், ‘‘எப்போது பைக் வாங்கிக் கொடுத்தீர்கள்... அவனுக்கு பைக் ஓட்டும் வயது வந்துவிட்டதா..?’’ என்று கேட்டார்.

''18ம் வயது நிரம்பியதும் பைக் வாங்கிக் கொடுத்தோம். ஆனால் இன்னமும் லைசென்ஸ் வாங்கவில்லை. லைசென்ஸ் வந்ததும் வண்டி வாங்கலாம் என்றுதான் சொன்னோம். ஆனால், அவன் பிடிவாதமாக வாங்கினான். அதேபோல், ஒரு சாதாரண வண்டி போதும் என்பதையும் கேட்காமல், அதிவேகம் தரும் வண்டியே வேண்டும் என்று வாங்கிக் கொண்டான்.. அந்த வண்டியை சமாளிக்க முடியாமல்தான் கீழே விழுந்து அடிபட்டு இறந்துவிட்டான்'' என்று அழுதார்கள்.

''அப்படியென்றால், அவனுடைய மரணத்தில் உங்களுக்கும் பங்கு இருக்கிறது...'' என்றார் ஞானகுரு.

''வாங்கிக் கொடுத்திருக்கக்கூடாது என்பது சரிதான். ஆனால், எல்லா பிள்ளைகளும் வண்டி வைத்திருக்கும்போது, இவனுக்கும் வாங்கித்தருவதுதானே முறை..'' தங்களை நியாயஸ்தராக காட்டிக்கொள்ள நினைத்தார் தந்தை.

இதுதான் ஒப்பீடு மனநிலை. பைக் வாங்கிக்கொடுக்கவில்லை என்றால் தன்னுடைய மதிப்பு பிறர் முன்பு தாழ்ந்துவிடும் என்ற எண்ணத்தில் மகனுக்கு வாங்கிக் கொடுத்திருக்கிறார். இளம் வயதினருக்கு ஆபத்து என்பதற்கு அர்த்தமே தெரியாது. மின்சாரம் போன்று பாய்வதை துணிச்சல் என்றும் தைரியம் என்றும்தான் யோசிப்பார்கள். தங்களுக்கு விபத்து நடக்கவே செய்யாது என்றே நம்புவார்கள். அதனாலே, எளிதில் மாட்டிக்கொள்கிறார்கள். இதனை இப்போது பேசுவது அவசியம் இல்லை என்பதால் ஆறுதல் கூறத் தொடங்கினார்.

''மரணம் வேதனை தரக்கூடிய நிகழ்வுதான். உங்களுக்கு ஆதரவாக நிற்கவேண்டிய ஒருவனை இழந்துவிட்டு நிற்கிறீர்கள். உங்கள் பெற்றோர், அவர்களுடைய பெற்றோர் என்று எத்தனையோ பேரை இழந்திருப்பீர்கள். அந்த சோகத்தைவிட, இதுவே மிகப்பெரும் இழப்பு. ஆனால், நகர்ந்து செல்லத்தான் வேண்டும். இனி, உங்கள் மகன் போன்று வேறு எந்த இளைஞனும் உயிரை விடக் கூடாது. ஆகவே, சாலையில் வேகமாகச் செல்லும் இளைஞர் யாரையேனும் ஒருவரை சந்தித்து உங்கள் இழப்பைச் சொல்லுங்கள். பாதுகாப்புடன் பயணம் செய்வதற்கு அறிவுறுத்துங்கள். மாதம் ஒரு நபரையாவது சந்தித்துப் பேசுங்கள். உங்கள் சோகத்தை அந்த இளைஞர் கேட்கிறாரோ இல்லையோ, உங்கள் மகன் பெயரில் இப்படி சேவை செய்வது நிச்சயம் உங்களுக்கு திருப்தியும் நிம்மதியும் தரும்...'' என்றார் ஞானகுரு.



> மரணம் வேதனை தரக்கூடிய நிகழ்வுதான். உங்களுக்கு ஆதரவாக நிற்கவேண்டிய ஒருவனை இழந்துவிட்டு நிற்கிறீர்கள். உங்கள் பெற்றோர், அவர்களுடைய பெற்றோர் என்று எத்தனையோ பேரை இழந்திருப்பீர்கள். அந்த சோகத்தைவிட, இதுவே மிகப்பெரும் இழப்பு.



அதை கேட்டு திருப்தி அடையாதவர்கள், ''என் மகன் இறந்துவிட்டான். அதேநேரம், அவனை ஆவியாக சந்திக்க விரும்புகிறோம். நாங்கள் படும் வேதனையை அவனிடம் சொல்ல ஆசைப்படுகிறோம்...'' என்றார் தந்தை.

அவர்களுடைய கோரிக்கையைக் கேட்டு சிரித்த ஞானகுரு, ''அது மிகவும் எளிது... செய்துவிடலாம்..'' என்றார்.

''எப்போது, எப்படி பூஜை வைத்துக் கொள்ளலாம் என்று சொல்லுங்கள். அதற்கு எத்தனை செலவானாலும் பரவாயில்லை...'' என்றவரை உற்றுப் பார்த்தார் ஞானகுரு.

ஞானகுரு விளையாடுகிறார் என்பதை அறிந்த மகேந்திரன், அவர்களை அழைத்துச்செல்ல முயன்றார். ஆனால், அவர்கள் யாரும் அசைவதாக இல்லை.

''சொல்லுங்க சாமி... நாங்க என்ன செய்யணும்...'' மீண்டும் மீண்டும் ஆர்வமாகக் கேட்டனர்.

''ஒரே ஒரு சிக்கல் இருக்கிறது. அதை முதலில் சொல்லிவிடுகிறேன். என்னுடைய சக்தியின் மூலம் உங்கள் மகனை ஆவியுலகத்திலிருந்து இங்கே கொண்டுவந்துவிட முடியும். ஆனால், அதன்பிறகு அவனால் அங்கு திரும்பிச்செல்ல முடியாது. அதனால் காலம் முழுவதும் உங்கள் வீட்டில் காற்றோடு காற்றாக அவன் கலந்தே நிற்பான். நீங்கள் ஏதேனும் மந்திர பூஜை செய்து அவனை வீட்டிலிருந்து வெளியேற்றும்படி கேட்கக் கூடாது. ஏனென்றால், அதற்கு வாய்ப்பே இல்லை. கால முழுக்க உங்கள் மகனின் ஆவியை உங்களுடன் வைத்திருப்பதற்கு ஒப்புக்கொண்டால் நாளையே பூஜை செய்யலாம்...'' என்றார் அழுத்தமாக.

ஞானகுரு சொன்னதைக் கேட்டதும் பெற்றோர் திடுக்கிட்டார்கள். தந்தை கொஞ்சம் சுதாரித்துக்கொண்டு, ''இல்ல சாமி.. வந்துட்டு அப்படியே போயிடுற மாதிரி செஞ்சிட முடியாதுங்களா..?'' என்று தயக்கத்துடன் கேட்டார்

''பெத்த மகன் என்றாலும் ஆவியான பிறகு உங்களுடன் வைத்துக்கொள்ள விருப்பமில்லை என்கிறீர்கள்... அவனுடைய சாவுக்கு நீங்கள் காரணமில்லை என்பதை சுட்டிக்காட்டுவதற்கே அழைக்கச் சொல்கிறீர்கள்... அப்படித்தானே...'' உஷ்ணமாகக் கேட்டார் ஞானகுரு.

''இல்ல சாமி...'' என்றவர் மேற்கொண்டு என்ன பேசுவது என்று தெரியாமல் தடுமாறினார்.

''உன் மகனை வைத்து வித்தை காட்ட நினைக்காதே... அழுகிய செடியை பராமரிப்பது வீண். புதிய வாழ்க்கைக்குத் தயாராகு...'' என்றபடி நடை போட்டார் ஞானகுரு.

**மந்திரச் சொல்**

எதிர்பார்ப்பை குறைத்து, ஏற்றுக்கொள்வதை வளர்த்துக் கொண்டால், இனியெல்லாம் சுகமே.





# மகிழ்ச்சிக்கு ரூ.500/-

ஞானகுரு மகிழ்ச்சி மின்னிதழுக்கு ஒவ்வொரு மாதமும் விமர்சனங்கள், பாராட்டுகள் அதிகரித்து வருவது, மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது. மக்களிடம் மகிழ்ச்சி, அன்பு, நிம்மதி, ஆறுதல் போன்றவற்றை பரப்பு வதையே ஞானகுரு மகிழ்ச்சி இதழ் நோக்கமாகக் கொண்டுள்ளது. வணிக நோக்கமற்று வெளியிடப்படும் இந்த மின்னிதழ் மற்றும் ஞானகுரு இணையதளம் (gyanaguru.com) இயங்குவதற்கு உங்களால் உதவ இயலும்.

இந்த மின்னிதழை உங்களுக்குத் தெரிந்த அனைவருக்கும், மற்ற குழுவினருக்கும் பகிர்ந்து, அவர்களையும் மற்றவர்களுக்கு பகிரச் செய்யுங்கள். இதுதவிர, மின்னிதழுக்கு ஆண்டு சந்தா 500 ரூபாய் என்று முடிவு செய்யப் பட்டுள்ளது. அதேநேரம், இதனை சந்தா கொடுப்பவர்கள் மட்டுமே படிக்க இயலும் வகையில் கட்டமைக்கவில்லை என்பதால், எப்போதும் போல் எல்லோரும் ஞானகுரு மகிழ்ச்சி இதழை படிக்கவும், பரப்பவும் முடியும். எனவே, விருப்பம் உள்ளவர்கள் கீழ்க்கண்ட அலைபேசி எண்ணுக்கு அல்லது வங்கிக் கணக்கிற்கு ஆண்டு சந்தா 500 ரூபாய் அனுப்பிவையுங்கள். பணம் அனுப்பியவர்கள், தங்கள் பெயர், முகவரியை கீழ்க்கண்ட செல்போன் எண்ணுக்கு வாட்ஸ் ஆப் மூலம் அனுப்ப வேண்டுகிறோம். இது, மகிழ்ச்சிக்கு அதிக மகிழ்ச்சி தரும்.

சந்தா செலுத்துபவர்கள் ஞானகுரு ஆறுதல் மையத்தில் உறுப்பினராக முடியும். குறிப்பிட்ட எண்ணிக்கையில் உறுப்பினர்கள் இணைந்ததும், ஆறுதல் மையம் குறித்த அதிகாரபூர்வ அறிவிப்பு வெளிவரும்.

நன்றி.

**GPAY : +91 72997 53999**


www.gyanaguru.com

# கெட்ட வார்த்தைக்கும் அன்பை வழங்கு..!




"எங்க வீட்ல இருந்து மூணு கிலோ மீட்டர் ஆட்டோ சவாரிக்கு கூச்சமே இல்லாம 150 ரூபா கேட்கு றாங்க... கேள்வி கேட்டா கெட்ட வார்த்தையில பேசுறாங்க... நாடு ஏன் இப்படி கெட்டுக்கிடக்குது சாமி..." கோபத்துடன் வந்துசேர்ந்த மகேந்திரன் இயலாமையில் புலம்பினார்.

"உன் கையில் இருக்கும் செல்போன் விலை என்ன..?"

"நான் என்ன சொல்றேன்னு கேட்காம, நீங்க செல்போன் விலை கேட்குறீங்க.. இது புது எடிசன்... 68 ஆயிரம் ரூபாய்க்கு வாங்குனேன்.."

"உன் செல்போனில் இருக்கும் அத்தனை வசதிகளும் கொரியன், சைனா செல்போனில் 10 ஆயிரம் ரூபாய்க்குக் கிடைக்கிறது. என்னதான் பிராண்டிங் என்றாலும் கூடுதலாக 50 ஆயிரம் ரூபாய் வைத்து கொள்ளை லாபம் அடிப்பது நியாயமா என்று அந்த நிறுவனத்திடம் கேள்வி கேட்பாயா மகேந்திரா..?"

"அதெப்படி சாமி... அவங்க ரேட் ஃபிக்ஸ் பண்றாங்க... எனக்கும் பிடிச்சிருக்கு வாங்குறேன். இதுல கேள்வி கேட்க என்ன இருக்குது..."

"அப்படியில்லை மகேந்திரா... உன்னைவிட பலமானவர்களை கேள்வி கேட்பதற்கு உனக்கு பயம்..." என்று சிரித்தார் ஞானகுரு. "அதெப்படி சொல்றீங்க.."


## மந்திரச் சொல்

தங்களிடம் இருப்பதை எல்லாம் அனுபவிக்கத் தெரிந்தவர்களே, பெரும் பணக்காரர்கள்.

"நீ மட்டுமல்ல எல்லா மனிதர்களுக்கும் அதிகாரத்தை எதிர்த்து கேள்வி கேட்பதற்கு பயம். அதேநேரம் இல்லாதவர்களும், கீழ்மட்ட மனிதர்களும் தங்களுக்கு அடங்கிப்போக வேண்டும் என்ற ஆதிக்க மனப்பான்மையும் இருக்கிறது. டூ வீலரில் ஹெல்மட் போடாதவர்களை லத்தியால் தடுத்து நிறுத்தும் போலீஸ் அதிகாரி, சிக்னல் மீறி வரும் சொகுசு கார் மனிதரிடம் பவ்யம் காட்டுகிறார். சூப்பர் மார்க்கெட்டில் பேரம் பேசாமல் பழங்கள், காய்கள் வாங்கி வரும் பெண், வாசலில் பூ விற்பனை செய்யும் பெண்ணிடம் 5 ரூபாய்க்கு மல்லுக்கட்டுகிறாள்.

குடும்பத்துடன் சினிமா பார்ப்பதற்கும், ஹோட்டலில் சாப்பிடுவதற்கும் ஆயிரங்களை எந்த முணுமுணுப்பும் இல்லாமல் செலவழிப்பவர், வாசலில் பிச்சை கேட்பவரைக் கண்டு எரிச்சல் ஆகிறார். கார் கம்பெனியின் சர்வீஸ் சென்டரில் எத்தனை பெரிய பில் போட்டாலும் மறுபேச்சு பேசாமல் கொடுக்கும் நபரே, ரோட்டுக்கடை மெக்கானிக் கேட்கும் கூலியைக் கேட்டு கோபமாகிறார். இப்படி அதிகாரவர்க்கத்திடம் அடங்கிப் போவதும், சாதாரண மனிதர்களிடம் அதிகாரம் செய்வதும் நியாயம் என்றால், அவர்கள் கெட்ட வார்த்தை பேசி உன்னை வெறுப்பேற்றுவதும் நியாயமே..." என்றார் ஞானகுரு.

> நீ மட்டுமல்ல எல்லா மனிதர்களுக்கும் அதிகாரத்தை எதிர்த்து கேள்வி கேட்பதற்கு பயம். அதேநேரம் இல்லாதவர்களும், கீழ்மட்ட மனிதர்களும் தங்களுக்கு அடங்கிப்போக வேண்டும் என்ற ஆதிக்க மனப்பான்மையும் இருக்கிறது.




"அதெப்படி சரியாக இருக்கும். எல்லோரும் எல்லா இடத்திலும் ஒரே மாதிரி நடக்கத்தானே வேண்டும்..?""

"சட்டம் மட்டுமல்ல மனிதர்களின் அன்றாட நடவடிக்கையும் அனைவரிடமும் சமமாக இருத்தல் வேண்டும். ஆனால், உன் மேலதிகாரியின் சின்ன வயது மகனுக்குக் கொடுக்கும் மரியாதையைத்தான் உனக்கு இஸ்திரி துணி கொண்டுவந்து தரும் மனிதரிடம் காட்டுகிறாயா..? காவல் அதிகாரியைக் கண்டதும் உடலை சுருக்குவது போன்று வாட்ச்மேனைக் கண்டதும் நெளிகிறாயா..? உனக்கும் சிலரையாவது அடிமையாகப் பார்க்கும் ஆசை இருக்கவே செய்கிறது. இந்த ஆதிக்க மனப்பான்மைதான் ஜாதி வன்மமாக, மத துவேஷமாக, மொழிப்பற்றாக வெவ்வேறு வகையில் வேஷம் போடுகிறது.

உன் மேலதிகாரி நல்லவராக இருந்தாலும் கெட்டவராக இருந்தாலும் அவர் என்ன செய்தாலும், பேசினாலும் அப்படியே ஏற்றுக்கொள்கிறாய். ஆனால் உனக்குக் கீழே இருப்பவர்கள் மட்டும் எப்போதும் நல்லவராக, உன்னிடம் அடிமை போல் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறாய்.

உன் அதிகாரி கார் வாங்குவதை கண்டுகொள்ளாத நீ, உன் வீட்டு வேலைக்காரப் பெண் ஒரு தங்கச்சங்கிலி வாங்கினால் சந்தேகப்படுகிறாய். ஏனென்றால் அவள் எப்போதும் ஏழையாக இருப்பதுதான் உனக்கு நல்லது. அதனால் அவர்களின் கனவுகளை, ஆசைகளை முடிந்த வரையிலும் நசுக்கப் பார்க்கிறாய்.

பெரிய ஷோ ரூம்களில், 'கண்ணாடியைத் தொடாம நில்லுங்க' என்று சேல்ஸ்மேன் சொல்வது உனக்கு அவமானமாகத் தெரிவதில்லை. அதையே பெட்டிக்கடை வைத்திருப்பவர் சொல்வது திமிராகத் தெரிகிறது.

எளியவர்கள் பெரும்பாலான மனிதர்களின் குப்பைத் தொட்டியாக இருக்கிறார்கள். பலரும் அவர்கள் மீது வார்த்தைகளால் வன்முறை செய்கிறார்கள். அந்த வேதனை தாங்காமல் அவர்கள் அவ்வப்போது சிறு குரல் எழுப்பினால், அதை புரட்சி குரல் என்று நினைத்து நசுக்கப் பார்க்கிறாய். எளிய மனிதர்கள் கோபம் காட்டினாலும் நீ அன்பைக் காட்டு. அவர்கள் விரக்தியின் உச்சத்தில், சோகத்தையும் கோபத்தையும் காட்டுகிறார்கள் என்றால் நீயும் கோபம் காட்டாதே. அவர்களின் வலியை புரிந்துகொள்.

மிகவும் சாதாரணமாக ஆங்கிலத்தில் கெட்ட வார்த்தை பேசும் உன் மேலதிகாரியின் செயலை ஏற்றுக்கொள்ள முடியும் உன்னால், ஆட்டோக்காரரின் கெட்ட வார்த்தைகளையும் உன்னால் ஏற்றுக்கொண்டு அசட்டுத்தனமாக சிரிக்க முடியும். எளிய மனிதர்கள் கெட்ட வார்த்தைகள் கொட்டினாலும் நீ அன்பை செலுத்து... அதுதான் அவர்களுக்கு நீ செய்யவேண்டிய அன்பு... அதுதான் நீ கொடுக்கவேண்டிய மரியாதை" என்றார் ஞானகுரு.

மலைத்துநின்றார் மகேந்திரன்.

# ஞானகுரு பதில்கள்




**? பிள்ளைகள் வெளி மாநிலத்தில் உள்ளனர். நான் ஓய்வு பெற்றுவிட்டேன். சாப்பாட்டுக்கு பிரச்னை இல்லை என்றாலும் பொழுதுபோக்குவது பெரும் கடினமாக இருக்கிறதே.?**

**- எம். ராஜதுரை, ஸ்ரீவில்லிபுத்தூர்.**

**ஞானகுரு :**

தினமும் இரண்டு மணி நேரத்தை அடுத்தவருக்கு கொடுக்கும் முடிவுக்கு வாருங்கள். நீங்கள் கற்ற கல்வி, பெற்ற அனுபவத்தை, கற்றுக்கொள்ள விரும்பும் அடுத்த தலைமுறைக்கு இலவசமாக சொல்லிக்கொடுங்கள். இனிமேல் எதற்கு என்று நினைக்காமல் இசை, மொழி, செஸ் என புதிதாக எதையாவது கற்றுக்கொள்ளுங்கள். இத்தனை காலமும் பெற்றவர்களுக்காக, மனைவிக்காக, குழந்தைகளுக்காக வாழ்ந்திருப்பீர்கள். இனியுள்ள காலத்தை உங்களுக்குப் பிடித்த வகையில் செலவிடுங்கள். பேச்சுத் துணைக்கு ஆள் இல்லாத நபர்களுடன் தினமும் உரையாடுங்கள். நேரம் போதவில்லை என்ற உணர்வு வந்துவிடும்.



**? கணவன், மனைவிக்குள் சண்டை வராமல் இருப்பது எப்படி? வந்தால் சமாளிப்பது எப்படி?**

**- எஸ்.மோனிசா, பாண்டிச்சேரி.**

**ஞானகுரு :**

இரண்டு பேர் இருக்கும் இடத்தில் சண்டையே வரவில்லை என்றால், அதில் ஒருவர் முட்டாள் அல்லது அடிமை என்று அர்த்தம். எனவே சண்டை வருவதுதான் ஆரோக்கியமான உறவு. எந்த சண்டை என்றாலும் அது தம்பதிக்குள் மட்டுமே நடக்க வேண்டும், வேறு எவரையும் அதற்குள் தலையிட அனுமதிப்பதில்லை என்பதில் இருவரும் உறுதியாக இருக்க வேண்டும். ஒருவர் அதீத கோபத்தில் இருக்கும்போது மற்றவர் கொஞ்சநேரமாவது அமைதி காக்கும் உபாயத்தை கடைபிடித்தால், எப்படிப்பட்ட சிக்கல் வந்தாலும் சமாளித்துவிட முடியும்.



**? திருமணத்திற்கு முந்தைய காதல் ஜெயிக்குமா அல்லது பிந்தைய காதல் ஜெயிக்குமா?**


**- ஏ.மரகதம், நாகை**

**ஞானகுரு :**

அம்மா, அப்பா மீது நீங்கள் அன்பாக இருக்கிறீர்கள் என்றால், அது ஒரு கட்டாய உறவு. நீங்கள் தேடிக்கொண்ட உறவு அல்ல. அது தானே அமைந்த உறவு அப்படியொரு நலம் நாடும் உறவுதான் திருமணத்துக்குப் பிறகான தாம்பத்தியம். அது நீண்ட தூர ரயில் பயணம் போன்ற ஏற்பாடு. திருமணத்திற்குப் பிறகு வரும் இந்த உறவுக்குப் பெயர் காதல் இல்லை. அதேநேரம், பெற்றோர் மீதும், உடன் பிறந்தோர் மீதும் அன்பு செலுத்துவது போல், இந்த உறவிலும் பாசமும் நேசமும் நிரம்பி வழியலாம். ஆனால், காதல் இவற்றை எல்லாம் தாண்டிய புனிதமான உறவு. வெற்றி, தோல்வி என்பதே காதலுக்கு இல்லை என்பதுதான் தனிச்சிறப்பு. ஏனென்றால் தோற்றுப்போன காதலும் காலம் முழுக்க இன்பம் தரக்கூடியது.







**? நாகரிகம் என்ற பெயரில் கிழிந்த ஆடைகளை ஆணும், பெண்ணும் அணிவது சரியா..?**

**- டி.பத்மா தியாகராஜன், திருவண்ணாமலை.**

**ஞானகுரு :**

கிழிந்த ஆடைகளில் ஆனந்தத்தை, விடுதலையைக் காண்கிறார்கள் என்றால் அனுபவிக்கட்டுமே. பறக்கத் துடிக்கும் வயசில் இதைக்கூட செய்யவில்லை என்றால் எப்படி? ஆடை என்பதே கிறுக்குத்தனம்தான். எனவே, அதன் அளவை பற்றி கவலைப்பட வேண்டியதில்லை.

**? அன்றைய குடும்ப வாழ்வைவிட, இன்றைய வாழ்க்கை சிறப்பாகத்தானே இருக்கிறது..?**

**- சி.சந்தானலட்சுமி, அம்பத்தூர், சென்னை.**

**ஞானகுரு :**

தாய்வழி சமூகமாகத்தான் மனிதகுலம் தழைத் தோங்கத் தொடங்கியது. அப்போது பெண்ணுக்கு ஆண் வேலைக்காரனாக இருந்தான். பின்னர் தந்தை வழி சமூகம் உருவாகி, பெண்களை அடிமை யாக்கியது. இப்போது பிள்ளை வழி சமூகம் உருவாகி யுள்ளது. 25 வயதில் ஆயிரங்களில், லட்சங்களில் சம்பாதிக்கும் பிள்ளைகள் கைக்கு குடும்பத் தலைமை மாறிவிட்டது. ஆகவே, இப்போது வீடுகளில் குழந்தைகளுக்கு அளவுக்கு மீறி முக்கியத்துவமும் செல்லமும் கொடுக்கப்படுகிறது. பிள்ளைகளை நன்றாக வளர்ப்பது என்ற ஒற்றைக் குறிக்கோளுடனே எல்லோரும் உழைக்கிறார்கள். இது, பிள்ளைகளின் எதிர்காலத்துக்கு நிச்சயம் நன்மையில்லை.



**? உறவினர்களைவிட நண்பர்கள்தானே நல்ல உறவு..?**

**- ஜி.பாண்டியராஜன், திருச்சி.**

**ஞானகுரு :**

அது உனக்குக் கிடைத்திருக்கும் நண்பனைப் பொறுத்தது. அண்ணாமலை, சீமான் போன்றவர்களுக்குக் கிடைத்திருக்கும் நண்பர்கள் போன்று உங்களுக்கும் கிடைத்துவிட்டால், நிச்சயம் அது நல்ல உறவுதான்.

**? மாணவர்களைக் கண்டிக்காத வகுப்பறை தேவையா..?**

**- எம். மலர்க்கொடி, சிவகாசி**

**ஞானகுரு :**

பிள்ளையை படிக்க வைப்பதற்காக லட்சக்கணக்கில் பணம் கொட்டுகிறார்கள். அந்த சம்பளத்தில் வாழும் வாத்தியார்களுக்கு தங்கள் பிள்ளைகளைக் கண்டிக்கும் உரிமை இல்லை என்று பெற்றோர்கள் நினைக்கிறார்கள். அது ஒரு வகையில் சரியானதே. ஏனென்றால், பெரும்பாலான ஆசிரியர்கள் சம்பளத் துக்குத்தான் வேலை செய்கிறார்கள். மாணவர்களின் மனநிலை, குடும்ப சூழல், கற்கும் திறன் போன்றவைகளை அறிந்துகொள்ளாமல், மந்தையை மேய்ப்பது போலவே பாடம் நடத்துகிறார் கள். இப்படிப்பட்ட ஆசிரியர்களுக்கு கண்டிப்பதற்கும் தண்டிப்பதற்கும் உரிமை கொடுப்பதற்கு அவசியமே இல்லை. அதேநேரம், மாணவர்களுக்கு சுயகட்டுப் பாட்டு, கூட்டுத்தன்மை, வாழ்வியல் அறம் போன்றவற்றை யாரேனும் கற்றுக் கொடுக்கத்தான் வேண்டும். இல்லை யெனில் பின்னர் சிறைச்சாலையும் நீதிமன்றமும் இவற்றை கற்றுக்கொடுக்கும்.



**? கல்லடி பட்டாலும் கண்ணடி படக்கூடாது என்கிறார்களே..?**

**- சி.கருப்பசாமி, தூத்துக்குடி.**

**ஞானகுரு :**

பிறரை பொறுத்துக்கொள்ள முடியாத பொறாமை உணர்வுக்கு ஆளாகுபவர்கள் மட்டுமே கண்ணடி, கண் திருஷ்டி போன்றவற்றில் நம்பிக்கை கொள்கிறார்கள். தனக்குக் கிடைக்காதது வேறு ஒருவருக்குக் கிடைத்திருப்பதைக் காணும்போது பொறாமை வருகிறது. அதேபோல், தனக்குக் கிடைத்திருப்பது வேறு யாருக்கும் கிடைத்துவிடக் கூடாது என்று எண்ணுவதும் பொறாமை உணர்வுதான்.

தங்கள் பிள்ளை 90 மதிப்பெண் வாங்கியதற்கு மகிழ்ச்சியடையும் பெற்றோர்களை விட, பக்கத்துவீட்டுப் பையன் 80 மதிப்பெண் மட்டுமே வாங்கியிருக்கிறான் என்று சந்தோஷப்படுபவர்களே அதிகம். தங்களுக்கு எது கிடைத்தாலும் அது திறமை மற்றும் உழைப்பினால் கிடைத்தது என்று நம்புபவர்கள் மற்றவர்களுக்கு கிடைப்பதை எல்லாம் அதிர்ஷ்டம், சீட்டிங் என



நினைக்கிறார்கள்.

தங்களைப் போலவே மற்றவர்களும் பொறாமைப்படுவார்கள் என்று நினைப்பவர்களே கண்ணடி, கண் திருஷ்டி மீது நம்பிக்கை வைக்கிறார்கள். பிறருடன் ஒப்பிட்டுப் பார்க்கும் தருணத்தில்தான் இப்படிப்பட்ட பொறாமை எண்ணம் வருகிறது. இரண்டு மாடி வீடு கட்டிவிட்டு, அதை ஐம்பது ரூபாய் பூசணிக்காய் மூலம் திருஷ்டி கழித்துவிடலாம் என்று எண்ணுவது வினோத வேடிக்கை.



**? ஜனனம், மரணம் கற்பிக்கும் பாடம் என்ன..?**

**- பி.நாகஜோதி, கீழமாசிவீதி, மதுரை**

**ஞானகுரு :**

மனிதரின் கட்டுப்பாட்டில் எதுவுமே இல்லை என்பதை நெத்தியில் அடித்து புரிய வைப்பதே பிறப்பும் இறப்பும். இதனை புரிந்துகொண்டு, இடைப்பட்ட காலத்தில் பிறருக்கு எவ்வித துன்பமும் தராமல் மகிழ்ச்சியுடன் வாழ முயற்சிப்பதே தெளிவு.

**? பசி வந்தால் பத்தும் பறந்துபோகும் என்கிறார்களே, அந்த பத்துக்கள் என்ன?**

**- பி.சிவனாண்டி,**

**ஞானகுரு :**

கல்வி, அறிவு, தவம், மானம், தானம், குலம், காதல், முயற்சி, பலம், பாசம் ஆகிய பத்தும்தான் பறந்துபோகும் என்பார்கள். இது விஷயமே இல்லை. பொதுவாக பிடித்த உணவை அதிகமாகவும், பிடிக்காத உணவை குறைவாகவும் சாப்பிடும் பழக்கம் உள்ளவர்களுக்கே பசி என்பது கொடுமையாகத் தெரியும். இவர்கள் பசியை அடக்குவதற்காக எந்த எல்லைக்கும் செல்வார்கள். அதேநேரம், எது கிடைத்தாலும் கொஞ்சமாக சாப்பிட்டுப் பழகியவருக்கு பசி ஒருபோதும் துயரமாகத் தெரிவதில்லை.

**? வாழ்க்கைப் போராட்டத்தில் பணக்காரர்கள் மட்டுமே வெற்றி அடைவது எப்படி?**

**- எஸ்சுந்தரபாண்டியன், வத்றாப்.**

**ஞானகுரு :**

வாழ்க்கையுடன் போராடத் தெரிந்தவன் ஒருபோதும் ஏழையாக இருப்பதில்லை. ஏனென்றால் அடிப்படை வசதிகளைப் பற்றி கவலைப்படாத ஒருவனே, அடுத்தகட்ட போராட்டத்துக்குத் தயாராகிறான்.

**? டீன் ஏஜ் பிள்ளைகளை வீட்டில் இழுத்துப்பிடித்து படிக்க வைக்கவே முடியவில்லையே....?**

**- எஸ்.ராணி பாத்திமா பேகம், விழுப்புரம்**

**ஞானகுரு :**

வெரி சிம்பிள். டீன் ஏஜ் பிள்ளையின் தோழர் அல்லது தோழிகளையும் உங்கள் வீட்டிற்கு அழைத்து, அனைவரையும் ஒன்றாக அமர்ந்து படிக்கச் செய்யுங்கள். ஜாலியும் கேலியும் இருந்தாலும், அவ்வப்போது படிப்பும் நடந்துவிடும்.



www.gyanaguru.com





மகிழ்ச்சிக்கு மொழி ஒரு தடையில்லை.
புதிய முயற்சியாக ஆங்கிலத்திலும் மலர்கிறது
ஞானகுரு மகிழ்ச்சி. எளிய மொழியில்
எல்லோருக்கும் கிடைக்கட்டும் மகிழ்ச்சி.

happiness only real when shared



ஆழ்மனமே தாழ் திறவாய்!

அத்தியாயம்-22

# கமல் ரஜினி யாரு பெஸ்ட்..?

சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த், உலக நாயகன் கமல்ஹாசன் ஆகிய இருவரும் கலையுலகில் இளவயதில் நுழைந்து இன்று வரை தாக்குப் பிடிக்கிறார்கள். தயாரிப்பு நிறுவனத்தையும் இயக்குநர்களையும் நம்பி படங்களில் நடிக்கிறார் ரஜினி. எந்த விதத்திலும் அவர் படத்தில் தலையிடுவதில்லை, அவை வெற்றியும் அடைகின்றன. அதேநேரம், கமல்ஹாசன் ஒவ்வொரு படத்தையும் தன்னுடைய தோளில் சுமக்கிறார். கதையில் தொடங்கி ரிலீஸ் வரையிலும் முழு கவனம் செலுத்துகிறார். ஆனாலும், அவருக்கு ரஜினி அளவுக்கு வெற்றியும் புகழும் கிடைக்கவில்லை. அப்படியென்றால் தன்னுடைய ஆழ்மனதின் மீது நம்பிக்கை வைப்பதால் மட்டும் ஒருவரால் ஜெயித்துவிட முடியாது என்பதுதானே உண்மை என்று நண்பர் ஒருவர் கேள்வி எழுப்பியிருந்தார்.

தோல்வி கிடைத்துவிடுமோ அஞ்சுபவர்கள் தவிர வேறு யாருக்கும் ஆழ்மனம் தோல்வியைத் தருவதில்லை. அதேநேரம், ஒருவரது வெற்றியை இன்னொருவர் வெற்றியுடன் ஒப்பிடுவதுதான் அபத்தம்.

ஏனென்றால் ஒருபோதும் இரண்டு மனிதர்களை, இரண்டு பொருட்களை, இரண்டு செயல்களை ஒப்பிடவே முடியாது. ஒவ்வொன்றும் தனித்தன்மை வாய்ந்தவை. அல்வா, பால்கோவா என இரண்டு இனிப்புகளில் எது பெஸ்ட் என்று கேட்க முடியாது. இனிப்பு என்றாலும் இரண்டும் வெவ்வேறு தன்மை கொண்டவை. அதேபோல், ரஜினியும் கமலும் ஒப்பிடமுடியாத அளவுக்கு தனித்தன்மை கொண்டவர்கள். இரண்டு பேரும் தொடர்ந்து வெற்றி, தோல்விகளைத் தாண்டி இன்னமும் தனித்தன்மை மாறாமல் ஆட்டத்தில் இருக்கிறார்கள்.

இவர்களில் யாருக்கு பெரிய வெற்றி, யாருக்கு சின்ன வெற்றி என்பதை வசூல் அல்லது படங்களின் எண்ணிக்கை மூலமாக வரையறுக்க முடியாது. இருவரும் அவரவர் பணியை முழு திருப்தியுடன் செய்கிறார்கள்.



www.gyanaguru.com

www.gyanaguru.com

இந்த கதையை நீங்களும் கேட்டிருப்பீர்கள். கோயில் கோபுரத்தில் வைப்பதற்கு ஒரு சிற்பி சிலை செய்துகொண்டிருந்தான். அந்த சிலையின் கைவிரல் ஒன்று தற்செயலாக உடைந்துபோனது. அவன் கொஞ்சமும் யோசிக்காமல் வேறு ஒரு கல் எடுத்து இன்னொரு சிலை செய்யத் தொடங்கினான். அதை பார்த்த ஒருவர், 'இந்த சிலையை உயரத்தில்தானே வைக்கப்போகிறோம்... விரல் இல்லை என்பது தூரத்திலிருந்து பார்ப்பவர்களுக்கு கண்டிப்பாகத் தெரியாது. அதையே வைத்துவிடலாமே...' என்று கேட்டார்.

அதற்கு அந்த சிற்பி, 'வேறு யாருக்கும் தெரியாது என்பது உண்மைதான். ஆனால், அதில் குறை இருப்பது எனக்குத் தெரியுமே. குறையுடன் ஒரு சிலை வைப்பதற்கு என்னால் முடியாது' என்றாராம். இந்த மனநிலையே வெற்றி. எந்த செய்கிறோம், எப்படி செய்கிறோம் என்பதும் முக்கியமல்ல. அதை எத்தனை ஈடுபாட்டுடனும் திருப்தியுடனும் செய்கிறோம் என்பதுதான் முக்கியம்.

தனக்கான படத்தை மற்றவர்கள் சிறப்பாக செய்துதருவார்கள் என்று முழு நம்பிக்கை வைக்கிறார் ரஜினி. ரஜினிக்கு இப்படி இருப்பதே மகிழ்ச்சியாகவும் வசதியாகவும் இருக்கிறது. மேலும் அவர் எதிர்பார்க்கும் பணமும் கிடைக்கிறது. ஆகவே, அவர் இதனை தொடர்கிறார். இதுவே தன்னுடைய பாதை என்று தேர்வு செய்து, அவருக்கென தனி வட்டம் போட்டு நடக்கிறார். வெற்றியும் பெறுகிறார்.

கமல்ஹாசன் எதை செய்தாலும் அதில் தன்னுடைய முத்திரை இருக்கவேண்டும் என்று நினைக்கிறார். ஆகவே, அவரது மனதுக்கு முழு திருப்தி கிடைக்கும் வகையில் பணியாற்றுகிறார். கமல்ஹாசனுக்கும் அவரது பாதை பிடித்திருக்கிறது. அவருக்கும் பணம் கொட்டுகிறது. ஆகவே, அவர் ரஜினியின் பாதையை பின்பற்றினால் எளிதாக வெற்றி பெறலாமே என்று ஆலோசனை சொல்வதில் அர்த்தமே இல்லை. கமலாக இருப்பதாலே கமல் வெற்றி பெறுகிறார்.

வெற்றிக்காக இருவரும் கனவு காண்கிறார்கள். அதேநேரம் தோல்விக்கு இருவரும் பெரிதாக அலட்டிக்கொள்வ தில்லை. உடனே, அடுத்த கட்டத்துக்கு நகர்ந்துவிடுகிறார்கள். ஏனென்றால், எல்லா தோல்விகளுக்கும் முழு காரணங்களையும் கண்டறிவது சாத்தியமில்லை. ஒவ்வொரு தோல்விக்கும் வெவ்வேறு காரணங்கள் இருக்கும்.

பொதுவாக சுவையான உணவை, நியாயமான கட்டணத்தில் கொடுத்தால், எந்த இடத்தில் ஹோட்டல் வைத்தாலும் மக்கள் தேடி வருவார்கள் என்பது சக்சஸ் பிசினஸ் ஃபார்முலா. ஆனால், சுவையான உணவு கொடுத்தும், நல்ல இடத்தில் ஹோட்டல் வைத்தும் தோற்றுப் போனவர்கள் நிறைய பேர் உண்டு. மிகச்சிறந்த அறுவை சிகிச்சை நிபுணர் என்றாலும், அவரிடமும் ஒருசில நோயாளிகள் இறக்கத்தான் செய்வார்கள். எனவே, முயற்சிகளில் தோல்வி வருவதும் இயல்புதான். அந்த தோல்விகளை ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவமே முக்கியம்.


தோல்வி ஏற்படும் தருணங்களில், தன்னுடைய கதை தேர்வு மக்களுக்குப் பிடிக்கவில்லை என்று நகர்கிறார் ரஜினி. தான் கதையை சொன்ன விதம் பெருவாரியான மக்களுக்கு திருப்தியாக இல்லை சமாதானம் செய்துகொள்கிறார் கமல். இந்த வகையில் கமலுக்கு தோல்விகள் அதிகம் என்றாலும், அவை எல்லாமே வெற்றிகரமான தோல்விகள்.

ஏனெனில், கமல்ஹாசனின் நிறைய தோல்விப்படங்கள் நீண்ட காலத்திற்குப் பிறகு பேசுபொருளாக மாறியிருக்கின்றன. படம் முழுக்க ஒரு வார்த்தைகூட யாரும் பேசாமல் நடித்த, 'பேசும் படம்' இப்போது திரையுலக மாணவர்களுக்கு பாடமாக இருக்கிறது 'ஹேராம்' படத்தில் நிஜம் கலந்த கற்பனை கதாபாத்திரம் உருவாக்கினார் கமல். இந்த படம் வெளியானபோது பெரும் தோல்வியைத் தழுவியது. ஆனால், இதனை இப்போது சினிமா ரசிகர்கள் கொண்டாடி வருகிறார்கள். ஒரு சில படங்களுக்கு வெற்றி தாமதமாகக் கிடைக்கலாம் என்பதை கமல்ஹாசன் அறிந்தேயிருக்கிறார். அதனாலே, அவருடைய ஆழ்மனதில் நினைப்பதை கொஞ்சமும் சமரசமின்றி செய்து பார்க்கிறார். ஏனென்றால் எல்லா விஷயங்களுக்கும் உடனடி பலன் எதிர்பார்க்கக்கூடாது.

கத்திரி, தக்காளி போன்ற பயிர்கள் சீக்கிரமாக விளைந்து பயன் தரக்கூடியவை. அதற்காக எல்லோரும் கத்திரி செடியே பயிரிட வேண்டும் என்ற அவசியம் இல்லை. காலம் கழித்து பயன் தரக்கூடிய தேங்காய், தேக்கு போன்றவையும் மனிதர்களுக்குத் தேவையே. எனவே, வெற்றியைக் கொண்டு ஒருவரை பெஸ்ட் என்றும் வேஸ்ட் என்றும் நிர்ணயிக்கக் கூடாது. எல்லோரும் வல்லவரே.

ஆழ்மனதால் ஒருவரை கோடீஸ்வரனாக்க முடியுமா..? ஆழ்மனதால் ஒருவரை முதல் ரேங்க் வாங்க வைக்க முடியுமா..? ஆழ்மனதால் ஒருவருக்குப் பிடித்த பெண்ணை மணமுடிக்க முடியுமா என்றெல்லாம் பலருக்கு சந்தேகம் இருக்கிறது. இதற்கு விளக்கம் சொல்வதற்கு முன்பு ஒரு குட்டிக் கதை.

ஒரு வியாபாரி ஆற்றின் கரையில் அமர்ந்திருந்தான். அங்கிருந்த ஒரு பரிசலில் பலரும் ஆற்றைக் கடந்துகொண்டே இருந்தனர். காலையில் வந்த வியாபாரி மதியம் வரை அங்கேயே காத்துக்கிடந்தான். அந்த ஓடக்காரர் மதியச் சாப்பாட்டுக்காக ஓடத்தை கரையில் கட்டிவிட்டு, வியாபாரிக்கு அருகில் வந்து அமர்ந்தார்.



> தோல்வி ஏற்படும் தருணங்களில், தன்னுடைய கதை தேர்வு மக்களுக்குப் பிடிக்கவில்லை என்று நகர்கிறார் ரஜினி. தான் கதையை சொன்ன விதம் பெருவாரியான மக்களுக்கு திருப்தியாக இல்லை சமாதானம் செய்துகொள்கிறார் கமல். இந்த வகையில் கமலுக்கு தோல்விகள் அதிகம் என்றாலும், அவை எல்லாமே வெற்றிகரமான தோல்விகள்.

''காலையில் இருந்து நீங்க இங்கே உட்கார்ந்து வேடிக்கை பார்த்துக்கிட்டு இருக்கீங்களே... ஊருக்குப் புதுசா..?' என்று கேட்டார். உடனே அந்த வியாபாரி கோபத்துடன், ''நான் ஆற்றைக் கடந்து செல்வதற்குத்தான் இங்கே காத்திருக்கிறேன். என்னை நீங்கள் அழைத்துச்செல்லவே இல்லை. ஏன் இப்படி நடந்துகொள்கிறீர்கள்...'' என்று குற்றம் சாட்டினான்.

உடனே ஓடக்காரர், ''நீங்கள் ஆற்றைக் கடந்து செல்வதற்காக அமர்ந்திருக்கிறீர்கள் என்பது எனக்கு எப்படி தெரியும்..? நீங்கள் பொழுதுபோக்காக வேடிக்கை பார்க்கிறீர்கள் என்றுதான் நினைத்தேன். நீங்கள் ஆற்றைக் கடக்கவேண்டும் என்று விரும்பினால், நீங்கள்தான் என்னிடம் வர வேண்டும்...'' என்று கறாராகப் பேசினார் ஓடக்காரர்.

இதுதான் சரி. யாருக்கு என்ன வேண்டுமோ, அதனை அவர்கள்தான் வாயைத் திறந்து கேட்டால் மட்டுமே கிடைக்கும். ஆனால் பெரும்பாலான மனிதர்கள் அந்த விவசாயி போன்றே அமைதியாக இருக்கிறார்கள். அதன்பிறகு, தனக்கு எதுவுமே கிடைக்கவில்லை என்று குறை கூறுகிறார்கள். என்ன வேண்டும் என்ற தெளிவும் அதை கேட்பதற்குத் துணிவும் இருப்பவர்களுக்கே பணம் கிடைக்கும்.

ஒருவருக்கு நிறைய பணம் வேண்டும் என்றால், நல்ல படிப்பு வேண்டும் என்றால் அதை நம்பிக்கையுடன் ஆழ்மனதிடம் சொல்ல வேண்டும். வெறுமனே சொல்வது மட்டும் போதாது, தனக்கு எந்த அளவுக்கு பணம் வேண்டும், எந்த வழியில் வர வேண்டும் என்பதையும் ஆழ்மனதுக்குப் புரியவைக்க வேண்டும். ஏனென்றால், கிராமத்தில் சில லட்சங்களை வைத்திருப்பவரே பணக்காரராக இருக்க முடியும். நகரங்களில் சில கோடிகள் இருந்தாலும் பணக்காரர் என்று சொல்லிக்கொள்ள முடியாது. ஆகவே, பணக்காரர் என்பதற்கு உங்கள் இலக்கணம் என்னவென்பதை ஆழ்மனதிற்கு தெளிவாக எடுத்துச்சொல்ல வேண்டும்.

அதாவது, என்னிடம் குறைந்தது 5 கோடி ரூபாய் இருப்பாக இருக்க வேண்டும். இரண்டு கோடி ரூபாய் பெறுமானமுள்ள ஒரு குட்டி பங்களா வேண்டும். என் வீட்டு வாசலில் இரண்டு கார்கள் நிற்க வேண்டும் என்றெல்லாம் சொல்ல வேண்டும்.

இன்னும் தெளிவாகச் சொல்வது என்றால், என்ன எதிர்பார்க்கிறீர்களோ, என்ன ஆசைப்படுகிறீர்களோ அது குறித்து மிகமிகத் தெளிவாக ஆழ்மனதிடம் விளக்க வேண்டும். எனக்கு இரண்டு கார்கள் இருக்கவேண்டும் என்று பொதுப்படையாக ஆசையை சொல்வதைவிட, எனக்கு ஒரு பி.எம்.டபிள்யூ. காரும் ஒரு பார்ச்சூனர் காரும் இருக்க வேண்டும். அடையாறு ஏரியாவில் நிச்சயம் வீடு இருக்க வேண்டும் என்றெல்லாம் படம் வரைந்து பாகங்களை வரைவது போன்று பணக்காரர் கனவை விவரிக்க வேண்டும்.

அதேபோல், எந்த வழியில் இறங்கி பணம் சேர்க்க விரும்புகிறீர்கள் என்பதையும் ஆழ்மனதிற்குக் கூற வேண்டும். இப்போது நீங்கள் வேலை பார்த்துக் கொண்டிருக்கும் மெடிக்கல் பிரதிநிதி வேலையை விட்டுவிட்டு, ஒரு புதிய மருந்து கம்பெனி ஆரம்பிக்கப் போகிறீர்களா அல்லது மெடிக்கல் ஷாப் வைக்கப்போகிறீர்களா அல்லது இன்றைய பணிக்கு சம்பந்தமே இல்லாமல் ரியல் எஸ்டேட் தொழிலில் இறங்கப் போகிறீர்களா என்றெல்லாம் திட்டமிட வேண்டும்.

நீங்கள் இன்னமும் பணக்காரர் ஆகவில்லை என்றாலும், பணக்காரராகிவிட்டால் எப்படி நடந்துகொள்வீர்களோ, அப்படித்தான் இப்போதும் நடக்க வேண்டும். ஆழ்மனம் நிச்சயம் பணத்தைக் கொடுத்துவிடும் என்ற நம்பிக்கை முழுமையாக இருந்தால் மட்டுமே அப்படி நடக்க முடியும். ஆகவே, அப்படித்தான் நடக்க வேண்டும்.

இவை மட்டும் போதாது, நீங்கள் பணக்காரராகிவிட்டால் அதன்பிறகு என்னவெல்லாம் செய்யப் போகிறீர்கள்... பணத்தை எப்படியெல்லாம் செலவழிப்பீர்கள். எப்படியெல்லாம் சேமிப்பீர்கள். எந்தெந்த நாட்டுக்கு எல்லாம் டூர் போகப் போகிறீர்கள் என்பதையும் மனதிற்குள் ஒரு சினிமா போன்று ஓட்டிக் காட்ட வேண்டும்.

நீங்கள் பணக்காரராக வேண்டும் என்றால், முதலில் மனதளவில் பணக்காரராக மாற வேண்டும். ஒரு தொழிலதிபர் போன்று நடந்துகொள்ள வேண்டும். இப்படியெல்லாம் செய்தால் பணக்காரராகிவிட முடியுமா..?

**– அடுத்த இதழில்**

## மந்திரச் சொல்


தங்களிடம் இருப்பதை எல்லாம் அனுபவிக்கத் தெரிந்தவர்களே, பெரும் பணக்காரர்கள்.






www.gyanaguru.com














RAJAN
Dental



Regain your confident smile with **Full mouth Dental Implants** at **Rajan Dental**

# எல்லோருக்கும் நிரந்தரப் பற்கள் சாத்தியமா..?

பல்வேறு காரணங்களால் அனைத்து பற்களையும் இழந்தவர்களுக்கு நிரந்தர பற்கள் பொருத்தி சாதனை படைத்திருக்கிறார்கள், 60 ஆண்டுகள் பாரம்பர்யம் கொண்ட சென்னை மயிலாப்பூர் ராஜன் பல் மருத்துவமனை மருத்துவர்கள். இதுகுறித்து சீனியர் மருத்துவ நிபுணர்களிடம் பேசினோம்.

**ஸைகோமா ஆல்-ஆன்-4 சிகிச்சை**

இந்த படங்களில் உள்ளவர்கள் அனைத்து பற்களையும் இழந்து எங்களிடம் நிரந்தர பற்கள் பொருத்தி கொண்டவர்கள். எங்களுக்குத் தெரிந்தவரை படத்தில் உள்ள 5 வயது குழந்தை தான், ஆசியாவிலேயே முதல் டென்டல் இம்பிளான்ட் பொருத்திய குழந்தை. அதே போல நாங்கள் 85 வயது நிரம்பிய முதியவருக்கும் நிரந்தர பற்கள் பொருத்தி உள்ளோம்.

முதுமையால், ஈறு நோய்களால், விபத்தால், கருப்பு பூஞ்சையால் (COVID), பிறவி குறைபாடுகளால் பற்களையும் தாடை எலும்பையும் இழந்தவர்களுக்கு இன்று உலகம் முழுவதும் நவீன ஸைகோமா ஆல் ஆன் 4 சிகிச்சைதான் (Zygoma All-on-4) சிகிச்சையே மேற்கொள்ளப்படுகிறது. இதனை கடந்த 30 ஆண்டு காலமாக ராஜன் பல் மருத்துவமனையில் ஒரல் டிஜிட்டல் ஸ்கேன், 3D பிரின்டட் ஸ்டென்ட்ஸ், கோன் பீம் சிடி ஸ்கேன் துணையுடன் கம்ப்யூட்டர் முறையில் ஆய்வு மேற்கொண்டு, நான்கே நாட்களில் நிரந்தர செயற்கை பற்கள் பொருத்துகிறோம்.

நாங்கள் பொருத்தும் செயற்கை பற்கள் அக்ரலிக், செராமிக்கால் தயாரிக்கப்படுவதால், 10 ஆண்டுகள் முதல் 30 ஆண்டுகள் வரை நீடித்து உழைக்கும். இதனால் மாறாத முகவடிவம், திருப்தியான உணவுப் பழக்கம், தெளிவான பேச்சு மற்றும் தன்னம்பிக்கையும் கிடைக்கும். இயற்கை பற்கள் போன்று உணவை நன்றாக மென்று சாப்பிடலாம் என்பதால் ஜீரணிக்கும் தன்மை அதிகரித்து நோய் பாதிப்பும் குறையும். மேலும், இந்த சிகிச்சையால் ஈறு தொற்று நோய் மற்றும் சர்க்கரை நோயும் கட்டுப்படுவது போனஸ் நன்மை" என்றனர்.

**பற்கள் சீரமைப்பு**

தொடர்ந்து பேசிய மருத்துவர்கள், "ஒருவரது புன்னகையை அழகாக்குவது சீரான பல்வரிசை தான். ஆனால், எல்லோருக்கும் அப்படி இயற்கையில் அமைந்து விடுவதில்லை. தெற்றுப்பல், எத்துப்பல், கோணல் வரிசை, ஒன்றன் மீது ஒன்று வளர்ந்திருப்பது, மேல் மற்றும் கீழ் பற்கள் சீரற்று அமைந்திருப்பது போன்றவை உண்பதற்கு இடையூறாக இருப்பதுடன் தன்னம்பிக்கையையும் குலைத்துவிடும். ஆனால், இப்போது இந்த அனைத்து குறைகளும், அலைன்மென்ட் டெக்னாலஜி மூலம் எளிதாகவும், முழுமையாகவும் எங்களால் சீர் செய்யப்படுகின்றன.

பற்கள் சீரமைப்பு மட்டுமின்றி தாடை சீரமைப்பு, நாடி சீரமைப்பு, தாடை சீரமைப்பு, இருக்கும் பற்களை டேமேஜ் செய்யாமல் அழகு படுத்துதல், ஈறுகளின் அளவை குறைத்து புன்னகையை சரி செய்தல், கம்பிகள் மூலம் பற்களின் ஒழுங்கின்மையை சரி செய்தல் போன்ற அனைத்து சிறப்பு சிகிச்சைகளும் நாங்கள் மேற்கொள்கிறோம்.

**காணொளி ஆலோசனை**

வெளி ஊர்களில் உள்ளவர்கள் மொபைல் போன் வாட்ஸ்-ஆப் வீடியோ கால் மூலம் எங்கள் மருத்துவர்களை தொடர்பு கொண்டு முதல் கட்ட ஆலோசனை பெற நாங்கள் வசதி செய்கிறோம். மேலும் தொடர்புக்கு...

**ராஜன் பல் மருத்துவமனை,**
எண்.56, டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை,
மைலாப்பூர், சென்னை-600004. தொலைபேசி-
044 40105050, அலைபேசி: +91 9789001100,
www.rajandental.com.